# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. III Issue 11 February 2014

இம்மாத மலரில். . .

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் . . . . . . . . . . . . . | 2 |
| இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . | 10 |
| சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . | 11 |
| யோக வாழ்க்கை விளக்கம் . . . . . | 13 |
| நெஞ்சுக்குரிய நினைவுகள் . . . . . | 15 |
| அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . | 21 |
| அன்பர் அனுபவம் . . . . . . . . . . . | 39 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 42 |
| அஜெண்டா . . . . . . . . . . . . . . . | 44 |
| அன்னை இலக்கியம் . . . . . . . . . | 46 |


**ஜீவியத்தின் ஓசை**

அன்னை நினைவு

உடல்

புல்லரிப்பது

பக்தி



கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

**ஸ்ரீ அரவிந்தம்**

**லைப் டிவைன்**
(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

## XXVI. The Ascending Series of Substance

Page 258
Para 11

Nor can this evolution end with the first meagre formation.

It is a formulation of life, mind, Supermind, Spirit.

They conceded to these higher powers.
It is done by the reluctant power of Matter.
As they evolve the pressure must also increase.
They awake, become more active, avid of their own personalities.
The pressure of the superior planes on them also increase.
It is a pressure involved in the world's existence.
Its close connection too has it.
Its interdependence of the worlds too have it.
They must increase the power and effectiveness.
These principles must manifest from below.
It is a qualified and restricted emergence.
They must also descend from above.
They must do so in their characteristic power.

It will be a full efflorescence.



## 26. உயரும் பொருளின் அடுக்குகள்

முதலில் எளிய உருவகத்துடன் இந்தப் பரிணாமம் முடியப் போவதில்லை.
இவை வாழ்வு, மனம், சத்திய ஜீவியம், ஆன்மாவின் உருவகங்கள்.
இந்த உயர்ந்த சக்திகட்கு அவை உட்படுகின்றன.
ஜடம் விருப்பமின்றி இணங்குகின்றது.
பரிணாம வளர்ச்சி இவ்வழுத்தத்தை அதிகரிக்கும்.
விழித்து, சுறுசுறுப்பாகி, தங்கள் பர்சனாலிட்டியை உணர்கின்றன.
உயர்ந்த லோகங்களின் அழுத்த சக்தியும் வளரும்.
உலக வாழ்விலுள்ள அழுத்தம் அது.
நெருங்கிய தொடர்புக்கும் அவ்வழுத்தம் உண்டு.
உலகில் பரிவர்த்தனை செய்வதாலும், அது உண்டு.
பவரையும், பலனையும் அதிகப்படுத்தும்.
இந்தத் தத்துவங்கள் கீழிருந்து வெளிப்பட வேண்டும்.
நிபந்தனைக்கும், அளவுக்கும் உட்பட்ட வெளிப்பாடு அது.
அவை மேலிருந்தும் வர வேண்டும்.
அப்படி வரும்பொழுது தம் சுபாவத்திற்குரிய பவர் வெளிவரும்.
அது முழு மலர்ச்சியாகும்.

It is into the material being.
The material creature must open up to wider play.
It is a play of the activities of Matter,
All that is needed is a fit vehicle, medium and instrument,
It is provided for in the body, life and consciousness of Man.

Page 259
Para 12

That body, life and consciousness may be limited.
They could be limited to the possibilities of the gross body.
Our physical mentality accepts only that.
It would be very narrow term for their evolution.
The human being cannot achieve more.
There is his present accomplishment.
He cannot accomplish anything essentially greater.
Our ancient science discovered something about this body.

This body is not the whole of our physical being.
It has a gross density,
It is not all our substance.
There is the oldest Vedantic knowledge.
It tells us five degrees of our being.

Each of these grades has a corresponding grade of substance.
They are the grades of our soul.
It was the ancient figurative language.
They are called sheaths.



ஜட ஜீவனுள் உள்ள மலர்ச்சியது.
ஜட ஜந்து பெரும் லீலையை எதிர் நோக்க வேண்டும்.
ஜடச் செயலின் லீலை அது,
தேவைப்படுவது தகுதியான கருவி, பொருத்தமான துறை,
மனித ஜீவியம் மனம், உடல், வாழ்வு, அதற்குரியது.

உடலும், வாழ்வும், மனமும் அளவிற்குப்பட்டிருக்கலாம்.
அவை ஜடமான உடலின் வாய்ப்பிற்குட்பட்டிருக்கலாம்.
ஜட உடலின் மனநிலை அதை மட்டும் ஏற்கிறது.
இப்பரிணாமத்திற்கு அவை குறுகிய இலட்சியங்கள்.
மனிதனால் அதற்குமேல் சாதிக்க முடியாது.
இன்றைய மனித சாதனையை நாமறிவோம்.
இதைக் கடந்து, முக்கிய பெரிய சாதனை அவனுக்கில்லை.
முன்னோர் சாத்திரம் உடலைப் பற்றிக் கண்டது
ஒன்றுண்டு.
இவ்வுடல் நம் முழு உடலுமில்லை என்றனர்,
ஜடமான கனம் பெற்றது இவ்வுடல்,
இது நம் முழுப் பொருளில்லை.
முற்கால வேத ஞானம் உண்டு.
அது பஞ்ச பூதங்களான ஜடம், வாழ்வு, மனம், இலட்சியம், ஆன்மாவாகும்.
இவை ஒவ்வொன்றிற்கும் உரிய பொருளுண்டு.

நம் ஆன்மாவில் பல நிலைகள் இவை.
அது பழங்கால உருவகமான பெயர்.
அவற்றை லோகங்கள் என்றனர்.

There was a later psychology.
They called it three bodies.
They were physical, subtle, causal,
In all of which the soul actually dwells simultaneously.
Here and now we are superficially conscious.
That is the material vehicle,
It is possible to become conscious in our other bodies,
It is in fact is opening up,
It opens up the veil between them,
So, the veil between the physical and psychical bodies opens up.
They are the causes of the “psychic” “occult” phenomena.

They now increase,
They are yet too little,
They are too clumsily examined.
They are far too much exploited.
The old Hathayogins and Tantriks have long ago reduced this matter.
It is of a higher human life and body.
They reduced them into a science.
They had discovered six nervous centres of life.
They are in the dense body.
They are corresponding to six centres of life in the subtle.

They have found exercises to open these centres.
They are subtle exercises.
They are the higher psychical life proper to our subtle life.



பிற்கால உள நூல் உற்பத்தியாயிற்று.
அவற்றை மூவுடல் என்றனர்.
அவை ஜடம், சூட்சுமம் காரணமாகும்,
இவற்றுள் ஆன்மா ஒரே சமயத்தில் உள்ளபடி உறைகின்றது.
இங்கு இப்பொழுது நாம் மேலெழுந்தவாரியாக அறிவோம்.
அப்படி நாமறிவது ஜட உடல்,
மற்ற உடல்களையும் நாமறிய முடியும்,
அவை உலகில் வெளி வருகின்றன.
இவ்வுடல்களிடையேயுள்ள தடையை விலக்குகின்றன,
நம் ஜட உடலுக்கும், சைத்திய உடலுக்கும் இடையேயுள்ள தடை விலகுகிறது.
உலகில் “சூட்சும” “சைத்திய” நிகழ்ச்சிகள் ஏற்படும் காரணம் அதுவே.
அவை வளர்கின்றன,
அவை இன்னும் சிறிதளவேயுள்ளன,
அவற்றைக் குழப்பமாக ஆராய்ந்துள்ளனர்.
இத்துறைகள் ஏராளமாகப் பயன்படுத்தப்பட்டன.
ஹடயோகிகளும் தாந்திரவாதிகளும் இதைக் கண்டுள்ளனர்.

இது உயர்ந்த உடல் வாழ்வைப் பற்றியது.
அவர்களால் இவை சாத்திரமாக்கப்பட்டன.
ஹட யோகம் உடலில் ஆறு சக்கரங்களைக் கண்டுபிடித்தது.
அவை ஜட உடலில் உள்ளன.
சூட்சும உடலில் உள்ள ஆறு சக்கரங்களை அவை குறிக்கின்றன.
இச்சக்கரங்களைத் திறக்கும் பயிற்சிகளைக் கண்டனர்.
இவை சூட்சுமப் பயிற்சிகள்.
சூட்சும வாழ்வுக்குரிய சக்கரங்கள் அவை.

Men entered into them.

There are physical, vital obstructions to the experience.

They obstruct the ideal and spiritual being.

They could be destroyed.

There is one prominent result claimed by the Hatha yoga.

It is significant.

It is verified in many respects.

It was a control of the physical life-force.

It liberated from them some ordinary habits.

They are so called laws of thought,

Physical science says so,

They are inseparable from the body.

Contd...

**ஜீவிய மணி**

அன்னையைத் தெரிந்ததிலிருந்து எப்படி நம் வாழ்வில் அவர் செயல்பட்டிருக்கிறார் என விபரமாக அறிவது ஞானம்.



பயில்பவர் அதன் வழி சக்கரங்களையடைவர்.

இவ்வனுபவத்தைத் தடைசெய்யும் உடலுக்குரியவை,

உயிருக்குரியவை உண்டு.

ஆத்மாவையும், இலட்சியத்தையும் அவை தடை செய்யும்.

தடையைப் பயிற்சி அழிக்க முடியும்.

ஹட யோகத்தில் ஒரு முக்கிய பலன் உண்டு.

அது முக்கியமானது.

அதைப் பல வகையாகவும் சோதனை செய்திருக்கிறார்கள்.

உடலுக்குரிய வாழ்வு, சக்தியைக் கட்டுப்படுத்தும் முறை அது.

சில எளிய பழக்கங்களை அவை விடுதலை செய்தன.

அவை எண்ணத்திற்குரிய சட்டங்கள் எனப்படும்,

விஞ்ஞானம் அப்படிக் கூறுகிறது,

உடலினின்று பிரிக்க முடியாதவை அவை.

தொடரும்...

**ஜீவிய மணி**

பிரச்சனையைத் தீர்க்க அன்னையை அழைப்பது பிரச்சனையிலுள்ள அன்னையுடன் ஐக்கியமாவது.

இம்மாதச் செய்தி

## ஏழ்மை
## இருளின் செல்வத்தை
## அருளின் செல்வமாக்கும்





**Page 159: She made a thinking body from chemic cells**
**செல்கள் சேர்ந்து சிந்திக்கும் உடலை எழுப்பின**

✡ தெய்வ சக்தியினின்று ஒரு ஜீவனை உருவாக்கினர்
✡ இல்லாததை எட்ட, நெருப்பாகத் துடித்தாள்
✡ எட்டாத உயரத்தின் இல்லாத இலக்கை அவள் கனவு கண்டாள்
✡ பிரம்மம் பிரம்மாண்டமாய்க் கீழே பாய் விரித்தது
✡ வாயில் திறந்து, மேலுலகைக் காட்டியது
✡ பூவுலகில் வண்ண நிழல் வளையமிட்டது
✡ அழியாத பொருட்கள் அழியும் அலைகளாய் நகர்ந்தன
✡ சொர்க்கம் மின்னலாக சில சமயம் தெறித்தது
✡ நெஞ்சையும், உடலையும் பிரகாசமான ஆத்மா கதிராகத் தொட்டது
✡ இலட்சிய ஜோதியின் பிரதிபலிப்பு எட்டித் தொட்டது
✡ மனிதனுடைய கனவுலக ஜீவன்கள் அவை
✡ மெல்லிய பிரியம் மனிதனில் நிலைக்க முடியாதது
✡ தேவதைகள் பறக்க அகந்தையெனும் விட்டிற்பூச்சி
✡ லேசான கவர்ச்சியின் தற்காலிக வருகை
✡ காலம் விட்ட சிறு மூச்சு கணத்தில் அழித்தது
✡ மரணத்தை மறந்த சந்தோஷம்
✡ அபூர்வ விருந்தினராக வந்து போனது
✡ ஒரு மணி நேரம் அனைத்தையும் அற்புதமாக்கினர்
✡ நம்பிக்கை மங்கி நடைமுறை காரியமாகி

✡ தழலென எழும் வேகம் சாம்பலாகத் தணியும்

✡ சிறு கனல் பூமாதேவியின் பொக்கிஷத்தைப் பொருத்தினாள்

✡ பொருட்டற்ற சிறிய ஜந்து

✡ தெரியாத சக்தி தெளிவுபடுத்த வந்தது

✡ சிறுமண்ணில் அவதியுறும் அர்த்தமற்ற மனிதன்

✡ ஆண்டு அனுபவித்து, வாடி இறந்து நீடிக்க முயன்று

✡ உடலுடன் அழியாத ஆத்மா, உயிருடனும் மறையாதது

✡ வெளிவராததின் நிழலாக அங்கு நின்றது

✡ புவியை உடைமையாக அது உரிமை கொண்டாடவில்லை

✡ இயற்கையின் நீண்ட, மெதுவான பாட்டை ஏற்று

✡ தன் அஞ்ஞானத்தின் வேலையைத் தானே கண்டறிந்து

✡ காண முடியாமல், உணர முடியாமல் பெரும் சாட்சி நின்றது

✡ இங்கு நிற்கும் பெருமையைக் காட்டுவது இல்லென

✡ புதிரான உலகையாளும் விவேகம்

✡ வாழ்வின் குரலைக் கேட்கும் மௌனம்

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

மனம் நிறை மலர்ச்சி அகம் அகந்தையால் நிறைவது.

நினைவு மௌனமாவது ஆன்மீக மலர்ச்சி.

இனிமை குளிர்ந்து நன்றியால் புல்லரிப்பது சைத்திய புருஷன் மனதில் துளிர்ப்பது.



## யோக வாழ்க்கை விளக்கம்

### 22/6. ஆர்ப்பாட்டமான அழிவு, இல்லாததை இருப்பதாக்கும் ஆர்வம்

- ரேஸ், சீட்டு, குடி, தாசி வீடு ஆகியவை அழிவை நாடும் ஆர்ப்பாட்டம்.
- இவற்றை நாடியவர் அழிவிலிருந்து தப்பியது குறைவு.
- ஏன் ஒருவருக்கு இந்தச் சுபாவம் வருகிறது என்பதைச் சொல்ல முடிவதில்லை. காரணம் என்று தெரிந்த அளவில் சொல்பவை.

— ஜாதகப்படி நடப்பது.

— முதல் தலைமுறை பணம், இரண்டாம் தலைமுறையில் அழிவை நாடும்.

— உள நூல்படி ஒருவர் முன்னுக்கு வரும்பொழுது எதிரான குணங்களைக் கட்டுப்படுத்தினால், அவைகள் பிள்ளைகள் வாழ்வில் வெளிப்படும்.

— பெறும் பெரும் செல்வம் பண்பால், அறிவால், தர்ம நியாயத்தால் பெறாமல், உழைப்பால், முயற்சியால் பெற்றால் அடுத்த தலைமுறை அழிக்கும்.

— தகப்பனார் உயர்ந்தவராகவும், தாயார் அல்பமானவராகவு-மிருந்தால் அல்லது மாறியிருந்தால், பிள்ளைகள் ஆர்ப்பாட்டத்தை நாடுவர்.

— மட்டமான ஊரில் பெரும் செல்வம் பெற்றால், இது நடக்கும்.

- தத்துவப்படி சச்சிதானந்தம் முடிவு. அது மோட்சம் தரும்.
- பகவான் கூறுவது சத்தும், அசத்தும் சேர்ந்து, இணைந்து, உயர்ந்து பூரண யோக இலட்சியமான திருவுருமாற்றம் தரும்.

**அழிவான ஆர்ப்பாட்டம் முடிவில் திருவுருமாற்றமாகும்.**

**திருவுருமாறும் என்றால் இன்று இல்லாததை இருப்பதாக்கும்.**

- சமூகம் மாறும்பொழுது நாம் இதைக் காணலாம்.
  அமெரிக்க வாழ்வு முழுவதும் இன்று நடுத்தெருவில் நின்றவன், வாழ்நாள் முடியும்பொழுது மேயராக, செனட்டராக, பணக்காரனாக, வக்கீலாக, ஜனாதிபதியாக ஆனான் என்பதாகும்.
- பஸ் கிளீனர், கண்டக்டர் டிரைவராகி, ஒரு பஸ் வாங்கி, அறுபது பஸ்ஸிற்கு முதலாளியானதுண்டு. இதைச் சாதித்தவன் முன்ஜென்மத்தில் அழிவை விரும்பி நாடியவன். முன் தலைமுறையில் ஆர்ப்பாட்டம் செய்தவனாகும்.

**இன்றைய அழிவு நாளைய பெருமை.**

- அடுத்த ஜென்மத்தில், அடுத்த தலைமுறையில் வருவது காலம்.
- அன்னை அன்பர் அருளைப் பெறுபவராதலால், மனம் உணர்ந்து திருந்தினால், சில ஆண்டுகளில் இது நடக்கும்.
- தினமும் இரண்டு சினிமா சில சமயம் மூன்று படம் பார்த்து வாழ்ந்த பட்டதாரி, அன்னையைக் கண்டு சிகரெட்டையும், சினிமாவையும் விட்டதனால் ஒரு நண்பருமில்லாதவருக்கு, ஜில்லா முழுவதும் பிரபலம் ஏற்பட்டது.
- ஆர்ப்பாட்டமும் அழிவும் தானே வரும், மனிதன் தேடிப் போவான், நண்பரால் வரும், தலைவிதியால் எழும். எப்படி வந்தாலும் அன்பன் என்ற நிலையில் ஆர்ப்பாட்டம் நிலைக்காது. திருவுருமாற்றம் நிலைக்கும்.
- சுபாவத்தை அறிந்தவன் கவி.
  சுபாவத்தைக் கண்டு கொள்வது ஜாதகம்.
  எப்படிச் சுபாவம் உருவாகிறது என்று ஒரு சாத்திரம் உலகில் இதுவரை உருவாகவில்லை. அது உலக வரலாற்றின் மனோதத்துவ இரகஸ்யம்.



# நெஞ்சுக்குரிய நினைவுகள்

## சமர்ப்பணத்தின் பகுதிகள், அம்சங்கள், பலதிசை பக்குவங்கள்

கர்மயோகி

— சமர்ப்பணம் சரணாகதியின் ஆரம்பம்.
Synthesis of Yoga-வில் இதன் தத்துவாம்சங்கள் மனித நிலை, அகந்தையொழிந்த பிரபஞ்ச நிலை, அந்நிலையில் ஆனந்தம் பெறுவது, தனி மனிதனுடைய சமர்ப்பணம் மனித குலத்தின் சமர்ப்பணமாவது, இவை கடந்த பிரம்ம நிலை, அவையனைத்தும் முக்குணங்கள் மூலம் மனித சுபாவத்தில் வெளிப்பட்டு, சரணாகதி பூர்த்தியாவது 4 அல்லது 5 பக்கங்களில் தெளிவாகக் கூறப்படுகிறது. அவை தத்துவம்.

— நடைமுறையில் தெரிய வேண்டிய விவரங்கள், முன்னறிவிப்பு, எச்சரிக்கை, கடந்தகால, எதிர்கால விளைவுகள், சூட்சும லோக விவரங்கள், இரகஸ்யங்கள், அவற்றுள் உடல், மனம், வாழ்வு, ஆன்மாவுக்குரிய தனிச் சிறப்புகள், குறிப்பாக நமக்கு உதவக் கூடியவை, தவறக் கூடியவை ஏராளமான விவரங்கள். எழுதுவதால் பூரணம் பெறும் கருத்தல்ல. எழுத்து மூலத்தையும், சாரத்தையும், அடிப்படையான, அத்தியாவசியமான அம்சங்களையும் சுட்டிக் காட்டலாம். அனுபவம் பூர்த்தி செய்யும்.

— எந்த ஒரு செயலும் ஆன்மா அளவில் உலகிற்கும், பிரபஞ்சத்திற்கும், பிரம்மத்திற்கும் முடிவிலும், மூலத்திலும் சமம்.

— காரியத்துள் உணர்ச்சி, எண்ணம், நினைவு, கற்பனை, விருப்பு, வெறுப்பு என எல்லா எண்ணத்தின் அம்சங்களும், செயலின் அம்சங்களும் நிறைந்திருப்பதைச் சமர்ப்பணத்தின் போது மனதில் ஏற்க வேண்டும்.

— நம் சமர்ப்பணம் நம்மைப் போன்றவர் அனைவரையும் தீண்டும்.

— பரநலம் சுயநலமாகப் பலிக்கும்.

சுயநலம் பரநலமாகும், நமக்கு எதிரான பலன் தரும்.

(பிறருக்கு நாம் நல்லெண்ணத்தால் விழைவது நமக்கு பலிக்கும். நமக்கு மட்டும் விருப்பப்படுவது பிறருக்கு மட்டும் பலிக்கும். சமயத்தில் எதிரிக்கு மட்டும் பலிக்கும்).

— சட்டம் தலை கீழே செயல்படும் பொழுது வாழ்வின் முழுமையைச் செயல் குதர்க்கமாக வெளியிடும்.

— நல்லது நல்லது செய்யும், கெட்டது கெட்டது செய்யும். உயர்ந்த நிலையில் நல்லது கெட்டது செய்யும். கெட்டது நல்லது செய்யும். அதனால் நல்லது கெட்டதாகாது. கெட்டது நல்லதாகாது. கூர்ந்து கவனித்து, ஆழ்ந்து உணர்ந்து அவை கூறுவதை அறிவது அவசியம்.

— **முதல் கடமை:** சமர்ப்பணம் நாள் முழுவதும் பூர்த்தியாக வேண்டும்.

100-க்கு 10 பலிப்பதும் ஆரம்பத்தில் கடினம். இது காலத்தைப் பொறுத்தது. மனத்தைப் பொறுத்து சமர்ப்பணம் இதே முழுமை பெறுவது அடுத்த கட்டம். சிரமம். அவசியம் செய்ய வேண்டியது. அளவு, தரம், காலம், இடம், விஷயம் ஆகிய அம்சங்களால் சமர்ப்பணம் பூரணம் பெறுவது முடிவான குறிக்கோள்.

- முறை முழுமை பெறும்படி ஆரம்பிப்பது அதிர்ஷ்டம்.
- *எவ்வளவு முன்னேற்றம் பெற்றோம் என்பதைவிட பெற்றதை இழையும் தவறவிடக் கூடாது. தவறினால் தவறியதை உடனே சரி செய்ய வேண்டும்.*
- பலனே நாம் சரியெனக் காட்டும்.

  அது அவசியம், மிக அவசியம்.

  பலனை முயன்று பெற வேண்டும்.

  பலனை *நினைக்காமல்* முயல்வதால் வரும் பலன் பெரியது.

  பலனை நினைக்காமல், எதிர்பார்க்காமல், பொருட்படுத்தாமல் பெறும் பலன் பெரியது, போற்றத்தக்கது.



- அவசியமான பலனை கட்டாயம் கருதாமல், தவறாமல் பெற வேண்டும்.

— **இரண்டாவது:** எழுத்தில் உள்ள அத்தனையையும், சமர்ப்பணத்தைச் சார்ந்தவை என்பதால் படித்து, புரிந்து, ஆழ்ந்து மனத்தால் ஏற்று, நினைவிலிருத்தி, ஒவ்வொரு முறை சமர்ப்பணம் பலிக்கும் பொழுதும், முக்கியமாக தவறும் பொழுதும், அதைவிட முக்கியமாகப் பலிக்கும் பொழுதும் எந்த அளவில் நாம் பின்பற்றியுள்ளோம் என கணக்கெடுப்பது நல்லது.

நாம் செய்தவை அன்னை நோக்கில் விமர்சனம் செய்யும் பாங்கு இக்கணக்கெடுப்பு.

— **மூன்றாவது:** ஆரம்பித்த சமர்ப்பணம் எந்த நிலையில், எந்த அளவு பலித்தாலும், அந்த அளவில், அளவில் முழுமையும், தரத்தில் பூரணமும் பெற வேண்டும். அந்த வரையறைக்குள் அதன்பின் குறை வரக் கூடாது. அதை சிறிது சிறிதாகச் வளர்க்க வேண்டும். உடல் வளர்வது எப்பொழுதும் குறைவதில்லை. அது போல் சமர்ப்பணம் குறைவற வளர வேண்டும். எந்தச் செயலையும் சமர்ப்பண நோக்கில் மட்டும் காண வேண்டும்.

— **நான்காவது:** உடல் தூய்மை போல, மனம் தூய்மை பெற்று நாளடைவில் தூய்மை அதிகரிக்க வேண்டும். தூய்மை குறைவதை அனுமதிக்கக் கூடாது. உடனே சரி செய்ய வேண்டும்.

— **ஐந்தாவது:** நேரம் கிடைத்தபொழுதெல்லாம் அதிகபட்சம் முடியுமளவு கடந்தகால சமர்ப்பணத்தை மேற்கொள்ள வேண்டும். நாள் முழுவதும் வேலை இருப்பதால் நேரமிருக்காது. ஆனால் வேலை நடுவே வரும் பழைய நினைவுகளை நினைவிலிருத்தி, சமர்ப்பணமாகும்வரை சமர்ப்பணம் செய்ய வேண்டும்.

— **ஆறாவது:** உலகம் பழித்தவற்றை அறவே கைவிடுதல் நன்று.

மனம் தவறு என்று கூறுபவற்றை முழுவதும் கைவிட முடிவு செய்ய வேண்டும்.

மீண்டும் மீண்டும் எழும் தவற்றை முக்கிய கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

பழைய தவற்றை மீண்டும் செய்யக் கூடாது என்ற முடிவு வேண்டும்.

அவை அகலாவிட்டால், குறைய வேண்டும்.

மனம் அத்தவறுகளை ரசிக்கக் கூடாது.

முடியாது என எதையும் ஒதுக்கக் கூடாது.

குழந்தைகளிடம் காணும் குறை, நம் குறை என அறிய வேண்டும்.

மீண்டும் மீண்டும் பிறர் மூலம் வரும் குறை, நம் ஆழத்தின் குறையென அறிய வேண்டும்.

வாதம் செய்வதைக் குறைத்துத் தவிர்க்க வேண்டும்.

வாதம் வெளியில் போனபின் மனத்தில் எழும்;

வாதமாக ஆரம்பித்து ஆராய்ச்சியாக மனம் சிந்திக்கும்.

சிந்தனை முடிவில் அடங்கும்.

அடங்கினாலும் அழியாது.

எந்தச் சிந்தனையுமின்றி செயல்படுவது யோக இலட்சியம்.

மனம் ஆழ்ந்து, அகன்று, அமைதியுற்று, சலனமிழந்து எழும் மௌனம் **(Mental Silence)** மனத்திற்குரிய மௌனம். அது ஆன்மவாயில். அதைக் கடந்தால், ஆன்மாவில் நுழையலாம். அது முடிவது பிரம்ம வாயில்.

— ***ஏழாவது:*** கோபம், அவசரம், பதட்டம், படபடப்பு ஆகியவை அடியோடு போக வேண்டும்.

முயற்சி பெரும் பலன் முதலில் தரும்.

மனம் பெறும் தெளிவு முன்னேற்றம் தரும்.

மனம் பெறும் வெற்றி மலை போன்றது.

பொறுமை பலன் தரும்.

இக்குறைகளால் பொறுமை இழக்காமலிருந்தால், அவை சீக்கிரம் பெரிய அளவில் கரையும்.



— ***சமர்ப்பணத்தில் உள்ள பல்வேறு தடைகள்:***

செயலைச் சமர்ப்பணம் செய்யும் பொழுது அது செயலாக உடலிலும், உணர்வாக இதயத்திலும், எண்ணமாக மனத்திலும் நிகழும்.

மனம் மேல்மனம் எனவும், அதற்கடியில் ஆழம் எனவும் இருபகுதிகளாக உள்ளது. (இவையிரண்டும் சேர்ந்தே மேல்மனமாகும். மனத்தின் மேற்பகுதி, கீழ்ப்பகுதியாகப் பிரிகிறது.)

அதேபோல் இதய உணர்வுக்கும் இரு பகுதிகள் உண்டு. உடலும் இரண்டாகப் பிரிகிறது.

நாம் இன்று சமர்ப்பணம் செய்யும் செயல் ஆதி நாள் முதல் பழக்கத்தால் நடப்பது (உ.ம் தண்ணீர் குடிப்பது)

சமர்ப்பணம் செயல்பட பழக்கம் விலகி, செயல் சமர்ப்பணத்தை ஏற்க வேண்டும்.

தண்ணீர் குடிக்க நினைத்தால் கை டம்ளரை எடுக்கிறது. குடிக்கிறது. சமர்ப்பணம் மறந்துவிடும், நினைவிருந்தால் பாதியில் நினைவு வரும்.

கையை நீட்டுமுன் சமர்ப்பணம் நினைவு வருவது முதற்கட்ட வெற்றி.

கையை நீட்டுமுன் உணர்வும், அதன்முன் நினைவும் அதற்கு அனுமதி அளித்திருக்கும்.

கவனமாக முதல் நினைவு எழுமுன் சமர்ப்பணம் நினைவு வருவது முதற்கட்டத்தில் பெரியது. அது நின்று நிலைத்து, நீடிப்பது நன்று.

அதன் பிறகு கவனித்தால் அவசரத்தில் இந்தச் சமர்ப்பணம் விட்டுப் போகும்.

இந்த வெற்றி எல்லா நிலைகளிலும் பரவி உறுதியானபின்

- பேச்சை சமர்ப்பணம் செய்ய முயன்றால், குடிப்பதைவிட நமக்கு எளிதாக அங்குச் சமர்ப்பணம் தவறுவதைக் காணலாம். இங்கு பெறும் வெற்றி விரைவாகப் போகும் எக்ஸ்பிரஸ் பஸ்ஸை கை நீட்டி நிறுத்துவது போலாகும்.

இதற்கடுத்த கட்டங்களில் ஓடும் ரயிலை நிறுத்துவது போன்றது சமர்ப்பணம்.

- சிரமம் எவ்வளவு பெரியதானாலும், ஆத்மீக முயற்சிக்கு மனித முயற்சி பெறாத வெற்றி கிட்டும். சிரமம் பெரிதானால் வெற்றியும் பெரியதாகும். முயற்சி மனத்திலிருந்து ஆத்மாவுக்குப் போக வேண்டும்.
- கோபம், படபடப்பு, அவசரம், நிதானமிழந்த நேரம், எக்காரணத்தை முன்னிட்டும் தீவிர வேகம் எழுந்த நேரம், சமர்ப்பணம் காத தூரம் போகும்.

ஏதாவது ஒரு சிறு விஷயத்திலாவது சமர்ப்பணத்தை எல்லா நிலைகளிலும் முழுமைப்படுத்தினால், அதன் அத்தனை அம்சங்களும், எதிரானவையும், தேவையான எச்சரிக்கைகளும், இழந்தால் பெறுவதன் கடினமும், ஏன் இழப்பது சரியில்லை என்பதும், நாம் ஆண்டவனை நோக்கி ஒரு அடி வைத்தால் அவன் நம்மை நோக்கி பத்து அடி எடுப்பான் என்பதன் உண்மையும் விளங்கும்.

சமர்ப்பணத்தில் வெற்றியைவிட அதைப் பூரணமாக அறிவது முக்கியம். அறிவது பலிக்க உதவும்.

**ஜீவிய மணி**

முறையின் முனை உயர்ந்து சிறந்தால் செயல் ஆண்டவனாகும்.

ஒரு முனை சிறப்பது பலன் உயர்வது.

எல்லா முனைகளும் செறிந்து சிறப்பது செயலையே உயர்த்துவதாகும்.

**பகுதி சிறப்பால் ஆண்டவனாகும் முறை.**



# அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

## 2. அமுத ஊற்றெழும் அழைப்பு

பகவான் திருநாமத்தை ஸ்மரணை செய்வது நம் பழக்கம். பூரணயோகத்தில் அன்னையை அழைத்து மனதில் பிரதிஷ்டை செய்வது அடிப்படையான யோகப்பயிற்சி. பக்திப்பெருக்கால் ஒரு நேரம் தானே ஆரம்பித்த அழைப்பு, சில சமயம் நீண்ட நேரம் தொடர்வதுண்டு. ஆர்வத்தால் ஆரம்பித்த அழைப்பு எதிர்பாராத நல்ல சில பலன்களையும் தருவதுண்டு. பிரச்சனை-கள் தீருவது, புதிய திறமைகள் ஏற்படுவது, இடையறாத அன்னை நினைவு நிலைப்பது போன்றவையும் நிகழ்வதுண்டு. க்ஷண நேரம் அன்னையுடன் இரண்டறக் கலக்கும் பேரின்பச் சித்தியும் கிடைப்பதுண்டு.

குடும்பத்தினர் அனைவரும் இந்தப் பயிற்சியை ஏற்றுக் கொண்டு இடைவிடாது தொடர்ந்து ஒரு வார காலம் அன்னையைத் தங்கள் ஜீவனுள் அழைத்தால், அக வாழ்வின் மலர்ச்சி எத்தகையதாக இருக்கும், அதன் பிரதிபலிப்பாக புற வாழ்வின் பொலிவுகள் எப்படி மிளிரும் என்பதை விளக்க வேண்டியே இக்கட்டுரையைத் தொடங்குகிறேன்.

பூரணயோகத்திற்கு அஸ்திவாரமாக அமைகிறது என்பதால் இதற்கு — அன்னையை நம் ஜீவனுள் அழைப்பதற்குப் — பெரிய சக்தியுண்டு என்று தெரிகிறது. ஆர்வத்தைச் சொல்லால் ஒலிப்பதே அழைப்பு எனப்படும். பக்தியின் திரட்சியான சக்தி ஜீவனின் குரலாக எழுந்து அன்னையின் சக்தியை நம்முள் சேகரம் செய்ய இந்த அழைப்பு உதவுகிறது. ஆர்வம் தீவிரமாகி, செறிவு பெற்றால் அதை ஒலியாக எழுப்ப முடிவதில்லை. நிறைவு பெற்ற பக்தியினால், தொண்டை அடைத்துக்கொண்டு பேச முடியாமல் திணறும். ஆர்வம் அதன் உச்சக்கட்டத்திற்குச்

சென்றவுடன் சொல்லாக எழுந்து, குரலாக ஒலித்து, அக்னிப் பிழம்பாக மாறி, வானுயர ஓங்கி, அருளின் அரண்மனைக் கதவைத் தட்டித் திறக்கச் சொல்லும். இந்த உச்சக்கட்டத்தில் நெஞ்சம் சொல்லை இழந்த நிலையிலும் ஒரு குரலை ஆழத்திலிருந்து எழுப்ப முயன்றால், குரல் நெஞ்சத்தை விட்டு அகன்று ஜீவனின் ஆழத்தில் சென்று, அங்கிருந்து கிளம்பி, மணியோசையாக ஒலிக்கும். உடன் மூலை முடுக்கு-களிலெல்லாம் இருந்து குரல் எழுவதை நாம் உணருவோம். ஆழம் அதிகம் ஆனதால் குரலை எழுப்பும் ஜீவனின் பரப்பு அகன்று மனிதனை முழுவதுமாக ஆட்கொள்வதைக் காணலாம். இந்த நிலைக்கு வந்த பக்தனுக்குச் சொர்க்கம் பெரியதன்று. ஏனென்றால் தன்னுள் சொர்க்கத்தின் சுகத்தைப் பெரிதும் உணர்கிறான். அழைப்பின் பலனாக அடைந்த ஆன்மீகப் பேறு, சித்தி பெற்றவரும் பெருமைப்படும் நிலைகள் என அறிந்து மகிழும் நிலையில் மற்றோர் எண்ணமும் தோன்றுவதுண்டு. அழைப்பின் பெருமையை அடைந்தவரே எனினும், அன்னை-யிலிருந்து வேறுபட்டு இருப்பதாலேயே நாம் “அழைக்கும்” நிலையில் உள்ளோம் எனப் புரியும்பொழுது ஆத்மாவுக்கு ஏற்படுவது வேதனையேயாகும். இரண்டறக் கலந்த நிலை-யிலிருந்தால் அழைப்பு தேவையிருக்காது என்பது இப்பொழுது ஆத்மாவுக்குப் புரிகிறது.

அழைப்பின் அடிப்படை ஒரு புனித ரகஸ்யம். அந்த ரகஸ்யத்தின் பலனையடைவதே நம் குறிக்கோள். சிருஷ்டியி-லிருந்து இன்றுவரை மனிதன் என்று நாம் குறிப்பிடுவதும், இறைவன் என்று சொல்வதும் ஆன்மீக அடிப்படையில் ஒன்றே. மனிதனும், இறைவனும் ஒன்றே. எது இறைவனாக இருக்கிறதோ, அதுவே தான் மனிதனாகவும் இருக்கின்றது. சொல்லப்போனால் கல்லும், மண்ணும், மனிதனும், இறைவனும் அடிப்படையில் ஒன்று என்பதே ஆன்மீக இரகஸ்யம். எனவே தாயை விட்டுப் பிரிந்த குழந்தை, தாயிடம் செல்ல எழுப்பும் குரலே ஜீவன் அன்னையை அழைப்பது. பூர்வஜென்மத்தை மறந்துவிட்ட ஜீவன், அதையுணர்ந்து இப்பொழுது மீண்டும் தன் பிறப்பிடத்தை அடைய எழுப்பும் ஆர்வக்கனலே அழைப்பு. உடலிருந்து



விடுபட்ட ஜீவன் எழுப்பும் குரல் வலுவடையும்பொழுது **(Origin)** ஆதியிலிருந்து வரும் பதில் ஜீவனுக்குப் பிறப்பிலிருந்து மோட்சம் அளித்து, தன்னுள் ஏற்றுக் கொள்ளும். ஜீவன் உடலுடன் பிணைந்திருப்பதால் ஜீவனுடைய குரல் வலுவடை-யும்பொழுது, ஆர்வம் உடல் எங்கும் பரவும். ஜீவன் எழுப்பும் ஆர்வக்குரல் மோட்சம் அளிப்பதற்குப் பதிலாக, மனிதனை விழிப்புறச் செய்யும். அவனது உடலையும் விழிப்புறச் செய்யும். ஆர்வக்குரல் பலத்த ஒலியுடன் ஆர்வக்கனலானால், உடலின் நுணுக்கமான பகுதிகளான அணுக்களும் விழிப்புற்று தங்கள் குரலையும் சேர்த்து எழுப்பும். பரந்து விரிந்த குரல் நுணுக்கமான மூலைகளிலும் பரவியபின் ஜீவன் விழிப்புற்று, தன் ஜடத் தன்மையை இழந்து, சிருஷ்டியின் ஆரம்பத்தில் தனக்குரிய ஆன்மீகப் பொலிவு பெற்று (**Origin**) ஆதியுடன் இரண்டறக் கலக்கும். யோகத்தின் இலட்சியமான திருவுருமாற்றத்தையடைய அவசியமான முதற்கட்டம் இரண்டறக் கலத்தல்.

ஜீவனின் எந்த ஆழத்திலிருந்து குரல் எழுகிறது, அன்னை-யின் எந்தச் சிகரத்தை நோக்கி அழைப்பு அமைகிறது, அதைப் பூர்த்தி செய்ய பக்தன் கையாளும் முறைகள் எவை என்பவற்றைப் பொறுத்தது முதலில் பெறும் திருவுருமாற்றம் (**transformation**) என்ற பூரணயோகச் சித்தி.

நாமஸ்மரணை முதற்கட்டம். காணாமற்போன பொருளைப் பெறவோ, கலங்கிய மனதைத் தெளிவுபடுத்தவோ அது உதவும். வாயால் எழுப்பும் ஒலி அது. அழைப்பு ஜீவனின் ஆர்வக்குரல். பெருந்திறன் படைத்தது அழைப்பு. குரல் எழுப்பும் ஜீவனுக்குப் பல நிலைகள் இருப்பதைப்போல், அழைப்பை ஏற்றுக்கொள்ளும் அன்னைக்கும் ஆயிரம் நிலைகள் உண்டு. இறைவன் என்பது முடிவான நிலையானால், அன்னை என்பது பூரணமான மற்றொரு நிலை (**Supramental Mahasakthi**). ஈஸ்வரி, லக்ஷ்மி, சரஸ்வதி, காளி என்ற நிலைகள் அன்னையிடம் மகேஸ்வரி, மஹாகாளி, மஹாலக்ஷ்மி, மஹாசரஸ்வதி என அன்னையின் அம்சங்களாக இருக்கின்றன. அன்னையைச் சுற்றி அவர் அறியாமலேயே செயல்படும் அற்புதச் சூழல்

(**atmosphere**) பக்தனின் குரல் கேட்டு அவனது பிரச்சனைகளுக்குப் பதில் அனுப்பும். உதாரணமாக, பக்தன் மஹா சரஸ்வதியை அழைக்கின்றான் என்று கொள்வோம். அவன் ஓர் ஓவியன் என்போம். அவனது அழைப்பு அவனை அன்னையுடன் இரண்டறக் கலந்த பேரின்ப நிலைக்கு அழைத்துச் செல்லாது. அன்னையின் ஒளி ஓவியமணியாக அவனை மாற்றும் வண்ணம் அவனை அடைந்து, அவனுக்கு உலகப் புகழைப் பெற்றுத் தரும். விஸ்வாசம், பெருந்தன்மை போன்ற சக்திகள் பன்னிரண்டு அன்னையிடம் உறைகின்றன. அவற்றில் ஒன்றை விளித்து அனுப்பும் அழைப்பு அவனுக்கு அப்பெருங்குணத்தை நிறைந்து வழியும் அளவுக்கு அளிக்கும். பொதுவாக அழைப்பை ஏற்றுக்கொண்டு பயிலும் அன்பர்கள் தானிருக்கும் நிலையை உணர்ந்தவராக இருப்பதில்லை. எதை அழைக்கின்றோம் எனவும் அறிந்திருப்பதில்லை. அழைத்தால் பலன் இருப்பதுண்டு. அன்றுள்ள மனநிலைக்கேற்ற, ஜீவநிலைக்கேற்ப பலன் அமையும். குறிப்பிட்ட நேரங்களில் பக்தன் தன்னை உணர்ந்து, அன்னையை அறிந்து அழைப்பதும் உண்டு. பிறந்த நாளன்று அன்னைமீது ஆர்வம் பெருக பக்தியால் சிறந்து உணர்வாய் வழிந்த நிலையில் அழைப்பை மேற்கொண்டால் அவனது பிராணன் அல்லது (**vital**) உணர்வில் இருந்து குரல் எழும். நெகிழ்ந்த இனிய தெய்வீக அன்பு அன்னையிடமிருந்து (**Divine Love**) அவனை வந்து பிரவாகமாக அடையும். ஒருவர் ஒரு புத்தகம் எழுதலாம் அல்லது புதியதாக கம்ப்யூட்டர் கற்றுக்கொள்ளலாம் அல்லது அரசியல் பதவியை நாடலாம். அந்த நிலையில் அன்னையை அழைத்தால், அழைப்பு மஹேஸ்வரியின் காதில் விழும். எழுதும் புத்தகம் ஆன்மீக மெருகு பெறும். மஹாசரஸ்வதியின் காதில் விழுந்து கம்ப்யூட்டரை எளிதில் சிறப்புறக் கற்றுக்கொள்ளலாம். மஹாகாளி குரலைக் கேட்டு அரசியலில் அவர் அநேக வெற்றி வாகைகளைச் சூடலாம்.

எந்த நிலையிலிருந்தும் ஜீவாத்மா தன் குரலை எழுப்பலாம்; அன்னையின் எந்தப் பெருமையையும் நோக்கி அழைக்கலாம் என்பது உண்மை. ஒரு வார காலம் குடும்பத்தார் அனைவரும்



சேர்ந்து இந்த யோகச் சிறப்புள்ள 'அன்னையை அழைத்தல்' என்பதை மேற்கொள்ளும்போது, தன்னுள் பூரண விழிப்புள்ள பகுதியிலிருந்து அழைப்பதே சிறந்தது. தானறிந்த அன்னையின் பெருமையையே கூப்பிடுதல் உசிதம். நாம் எந்த நிலையில் இருக்கின்றோம் என்ற கேள்வி எழலாம்.

ஒவ்வொரு விஷயத்தையும் அன்னையின் நோக்கில் புரிந்து கொள்ள முயல்பவர், அவரது புத்தியில் விழிப்பாக இருக்கின்றார் என்றாகும். நாம் உணர்வில் விழிப்பாக இருக்கின்றோமா என எப்படி அறிவது? அடுத்த முறை பேசும்பொழுதோ, சாப்பிடும் பொழுதோ நம்மையே ஊன்றிக் கவனித்தால் பேச்சு எழுமுன் அன்னை நினைவு தானாக வந்தால், சாப்பாட்டுக்குமுன் அன்னை நினைவு எழுந்தால் நாம் உணர்ச்சியில் விழிப்புடனிருக்கின்றோம் என்று பொருள். பேனாவைத் திறப்பது, கடிகாரத்தை நிமிர்ந்து பார்ப்பது போன்ற சிறு சிறு செயல்களுக்கு முன்னும் அன்னை நினைவு வந்தால், உடல் விழிப்புப் பெற்றுள்ளது என்று தெரிகிறது. அன்னையை வரமளிக்கும் தெய்வமாக அறிந்தவர் சிலர். தெளிந்த அறிவைத் தருபவர் அன்னை என்பவருண்டு. மௌனத்தின் உறைவிடமாக அறிபவரும் உண்டு. வெற்றி தரும் அன்னையாகக் கொள்வோர் சிலர். தெளிவை உணர்ந்தவர் அன்னையின் மஹேஸ்வரி அம்சத்தை அறிந்தவர். வெற்றி மஹாகாளியினுடையது. வரம் அன்னையின் அற்புதப் புறச் சூழலிலிருந்து உற்பத்தியாவது. மௌனம் அன்னையிடமிருந்தே எழுவது.

தன் நிலைமையை உணர்ந்து, அன்னையின் நிலையை அறிந்து அழைப்பை மேற்கொண்டாயிற்று. இனி எழும் குரல் எளிதில் புறப்பட்டு, தெளிவாக உயர்ந்து, முறையாக அன்னையை அடைகிறதா எனப் பார்க்க வேண்டும். ஒரு வார காலத்தைக் குறிப்பிட்டுப் பயிற்சியை ஆரம்பிக்குமுன் இக்குரலை எழுப்பி, அதன் யாத்திரையைத் தொடர்ந்து பின்சென்று அழைப்பின் தரம், திறம் எத்தன்மையானது எனத் தெளிய வேண்டும். எளிமையான எழுச்சி, நிறைந்த நிலை, தொடர்ந்த யாத்திரை, முழுமையான முடிவு என அழைப்பின்

போக்கு அமைந்திருந்தால், அழைப்பு இலக்கணத்திற்கு உரிய முறையில் அமைந்திருப்பதாகும். அப்படி இல்லை என்றால், அழைப்பின் அளவைக் குறைத்து, அதற்குப் பூரணத் தெளிவைத் தருவது அவசியம். வேறு எண்ணங்களோ, நினைவுகளோ அழைப்புக்கு இடையூறாக இருக்கலாம். அல்லது மனம் நிலையிழந்து அலைமோதும். இப்படிப்பட்ட நிலையிருந்தால் மனத்தைத் தெளிவுபடுத்தி ஒரு நிலையில் இருக்கச் செய்வது முக்கியம்.

எண்ணம் குறுக்கிடுவது என்போம். நமக்கு நாமே 'அன்னை நினைவு எந்த எண்ணத்தையும் விடச் சிறந்தது' என்று சொல்லிக் கொண்டால், மனம் அதை ஏற்றுக்கொள்ளும். ஒவ்வோர் எண்ணத்தையும் புறக்கணித்து அன்னையை நினைவு கூர்ந்தால் சிறிது நேரத்தில் மனம் நிலைப்பட்டுவிடும். சப்தம், காட்சிகள், வாசனைகள் மனத்தைப் புறத்தே ஈர்க்கலாம். அப்படியிருந்தால் அன்னையின் ஒளியை நம் (நாதம், பிராணன்) உணர்வு எனுமிடத்தில் கற்பனை செய்தால் அவ்வொளியை உணர்வு ஏற்று, குறுக்கிடும் ஒலியை மனத்திலிருந்து விலக்கும்.

அலைபாயும் மனம் அழைப்புக்கு முதல் எதிரி. முதலில் அலையை அழித்து மனத்தை நிலைப்படுத்த வேண்டியது அவசியம். இது எளிதன்று. 100-க்கு 100 பேர்களுக்குத் தோல்வியை அளிக்கும் மனநிலை இது. இதற்கும் ஒரு வழியுண்டு. நாம் அழைப்புக்குரிய இடத்தை நம் ஜீவனிலும், அன்னையின் சிகரத்தை ஆன்மாவிலும் குறிப்பிட்டு அழைப்பை ஆரம்பித்திருக்கிறோம். இந்த இடைவெளியில் அன்னையின் ஒளியைக் கற்பனை செய்து அம்முழுப் பரப்பையும் ஒளியால் நிரப்ப முயன்றால், ஒளியின் வருகை மோதும் அலையை அழித்து அமைதியை நிலைநாட்டும்.

எந்த அளவுக்கு ஒளி பரவுகிறதோ, அதுவே நமக்கு அமைந்த திறன். நாள் செல்லச் செல்ல ஒளியின் அளவை அதிகரிக்க முயலலாம். இத்துடன் ஒரு வார அழைப்பை ஆரம்பிக்க வேண்டும்.



ஆரம்பித்தவுடன் தன் பாதை சரியா எனத் தெரிவது அவசியம். குறுக்கீடுகளின்றி, மனம் குவிந்து, குரல் நிதானமாக எழுந்து அதன் இலக்கைச் சென்றடைகிறதென்றால் அழைப்பின் அமைப்பு சரியானதாகும். அன்னையின் பெயரை விரைந்து சொல்ல முயலக் கூடாது. ஒருமுறை அழைத்தவுடன் பொறுமையாக என்ன நடக்கிறது என்று கவனித்தால், அமைதி, சாந்தம், சந்தோஷம் பொங்கி எழுந்து உடல் முழுவதும் பரவுவது தெரியும். முதல் அலை முழுவதும் பரவி அடங்கும்-வரை நிதானமாக இருத்தல் நன்று. பின்னர் அடுத்தமுறை அழைக்கலாம். அழைப்பும், அதைத் தொடர்ந்து அமைதியின் அலையும் இருப்பதும் தெரியும். பின்னர் அமைதி பொங்கி எழுவதும், அழைப்பும் இணைந்து வருவதும் தெரியும். அழைப்பால், அமைதி அலை எழுவது ஒருமுறை. இரண்டும் பிணைந்து வருவது மற்றொரு வகை. அழைப்பின்றி அமைதி அலை அலையாக எழுவது வேறொரு நிலை. இந்நிலையில் தொடர்ந்து அழைத்தல் சிறந்தது. கொஞ்சம் கொஞ்சமாக ஒரு நாள் முழுவதும் அழைக்க முயன்று, பின்னர் ஒரு நாளை ஒரு வாரமாக ஆக்கவேண்டும்.

இந்த அழைப்புக்கு நம்மைத் தயார் செய்துகொள்ளும் பொழுதே நம்மைச் சுற்றியுள்ள நம்முலகம் மெதுவாக நமக்குக் கட்டுப்பட்டு அடங்குவதைக் காணலாம். நமக்குச் சிறியவர்கள் கூட ஏற்றுக் கொள்ள மறுக்கும் நம் கருத்துகளை இப்பொழுது, நமக்குப் பெரியவர்கள்கூட ஏற்றுக்கொள்வதைக் காணலாம். நம் சொல்லுக்குக் கட்டுப்படாதவர்கள் எளிதில் கட்டுப்படுவது தெரியும். எந்த வேலைகள் கூடிவரவில்லை என்பது நமக்குத் தெரியுமோ, அவை இப்பொழுது பூரணமடையும். அதாவது நம் மனமும், வாழ்வும், உடலும் திறனடைந்து உயர்வதைக் காண்போம்.

ஆன்மீக நிலையிலும் மாற்றம் தெரியும். ஒரே நிமிஷமானாலும் மௌனம் மனத்தைத் தேடி வரும். ஒரு க்ஷணமானாலும் நெஞ்சம் சந்தோஷத்தால் நிறைந்து பூரணம் பெறும். படபடத்த உடல் கொஞ்ச நேரம் அமைதியுறும்.

வீட்டிலும், வேலை செய்யுமிடத்திலும் (**disharmony**) பிணக்கு ஒழியும். ஒரு சமயம் தலையை நீட்டினாலும் சிறிது நேரத்தில் மறைந்துவிடும்.

நாமஜெபம் என்பது வேறு. அழைப்பு என இங்கு குறிப்பிடு-வது அதனின்று முற்றிலும் வேறுபட்ட ஒன்று. ஜெபம் வாயால் எழுப்பும் ஒலி வடிவம். அழைப்பு ஜீவன் முழுவதும் நிறைந்-தெழுந்த ஆர்வக் குரல். அதன் திறன் மிக அதிகம். வாயால் ஜெபிப்பதை ஒலி என்கிறோம். மனத்தால் நிசப்தமாகச் செய்யும் ஜெபம் மனத்தின் உச்சரிப்பாகும். மனம் முழுவதும் அழைப்பில் கலந்து எழுப்பும் ஒலி, நிசப்தமான நிறைவு பெற்றதாகும். அதேபோல் உணர்வு ஒலிக்கும் நிலையைக் கடந்து நின்றால், அதை ஆர்வம் என்போம். அதையே முழு நெஞ்சும் ஏற்று நிறைகுடமானால் ஆர்வம் அமைதியுற்ற தீவிரமாகும். இந்த நிலையை நாம் தன்னிலை இழந்த பரவசம் என்றறிவோம்.

உடலும் அழைக்கும். அணுவும் அழைப்பில் கலந்து கொள்ளும். அழைப்பு நம்மை ஊடுருவி உடலையும், அவற்றின் அணுவையும் அடைந்து, அங்கிருந்து 'அன்னை' என்ற ஓசையை எழுப்பினால் அவ்வொலி தெளிவுற நம் காதில் விழும். இங்கும் அழைப்பு உடல் முழுவதும் பரவினால் ஒலி அடங்கும். உடல் அமைதியால் பொங்கி விம்மி எழும். கடைசி கட்டம் இதற்கும் அடுத்தது. உடல், மனம், ஆவி அனைத்தும் ஆன்மாவுடன் சேர்ந்து ஜீவன் எனப்படுகிறது. ஜீவன் முழுமையாக அழைப்பை ஏற்றுக் கொள்வதும் உண்டு. அழைப்பின் அந்த நிலைக்கும் பல கட்டங்கள் உண்டு.

இராம நாம ஜெபம், கிருஷ்ண நாம ஜெபம் செய்வதும், நமசிவாய என்று உச்சரிப்பதும் நம் பழக்கம். எந்தத் தெய்வத்தை அழைக்கிறோமோ அந்தத் தெய்வத்தின் சக்தி நம்முள் வந்து செயல்படுகிறது. இராம நாமம் சத்துவ குணத்தையும், கிருஷ்ண ஜெபம் தெய்வ சக்தியையும் கொண்டு வருகின்றன. அன்னையை அழைத்தால் தெய்வ லோகத்திற்கும், சச்சிதானந்தத்திற்கும் இடையேயுள்ள (**Supramental**) சத்தியலோக சக்தி - **Mother's Force** - அன்னையின் சக்தியை நம்முள் கொணர்ந்து செயல்-



படுகிறது. அழைப்பின் திறம், முடிவில் நாம் பெறும் யோகப் பலனை நிர்ணயிக்கின்றது. ஜீவன் முழுவதும் அன்னையை அழைத்தால், ஜீவன் அன்னையாகத் திருவுருமாற்றம் அடையும் வாய்ப்பைப் பெறும். திருவுருமாற்றம் என்பதன் மூன்று நிலைகளைப் பகவான் குறிப்பிட்டு, அவை 1. சைத்தியப் புருஷன், 2. ஆன்மா, 3. சத்தியஜீவன் (**Supramental being**) என விளக்குகின்றார். முதல் நிலையில் சைத்தியப்புருஷனாகவும், இரண்டாம் நிலையில் ஆன்மாவாகவும், கடைசி நிலையில் சத்தியஜீவனாகவும் மனிதன் திருவுருமாற்றம் அடைகிறான். அன்னை என்பது பல நிலைகளில் உள்ளது என்கிறோம். (**Mother Nature**) 'இயற்கை அன்னையைச் சந்தித்தேன்' என அன்னை கூறுகிறார். உடல், உணர்வு, புத்தி, தெய்வம், சத்தியம் என்ற ஒவ்வோர் நிலைக்கும் உரிய (**Mother Force**) அன்னை வடிவம் உண்டு. நம்முடைய முழு ஜீவனும் அன்னையை அழைத்தால் நாம் உள்ள நிலைக்குரிய அன்னையாக மாறும் வாய்ப்புண்டு.

நம் ஜீவனின் ஆழத்தை அடைந்து, அங்கிருந்து அன்னையை அழைத்து, அழைப்பைத் தொடர்ந்து நிலைபெற முடியவில்லை என்றால் என்னாகும்? அழைப்பு நடுவில் அறுந்து போகலாம். ஆனால் அழைப்பின் பலன் ஜீவன் முழுவதும் சூழ்ந்துகொண்டு அதுவரைக்கும் உண்டான ஆன்மீகப் பலனையளிக்கும். நடை-முறையில் வெளியுலகில் நம் பிரச்சனைகள் தீர்ந்து, வாய்ப்புகள் தலைதூக்கும்.

மனத்தளவில் பிரச்சனை என்பது மனத்திலுள்ள குழப்பம். வாய்ப்பு என்பது புதிய கருத்துகள். மனம் அன்னை சக்தியால் நிரம்பினால் குழப்பம் மறைந்து, புதுப்புதுக் கருத்துகள் மனத்தில் ஒளிரும். உணர்ச்சி அன்னையால் நிரம்பினால் எரிச்சல் ஒழிந்து, மனோதிடம் பெருகும். நம்மைவிட உயர்ந்த நிலையிலுள்ளவர்கள் நம்மிடம் உதவி மனப்பான்மையுடன் பழகுவார்கள். உடல் அதே சக்தியைப் பெற்றால், நோயொழிந்து ஆயுள் பெருகும் நிலை ஏற்படும். ஜீவன் முழுவதும் அன்னையைப் பெற்று உயரலாம். அப்படியானால் நமக்குப்

புதிய திறமைகள் ஏற்படும். நம் இயலாமை (**incapacity**) மறையும்.

மனத்திற்கும், உணர்ச்சிக்கும், உடலுக்கும், ஒவ்வொன்றுக்கும் மூன்றாக மொத்தம் ௯ நிலைகள் ஜீவனுக்குண்டு. ஒவ்வொரு நிலையையும் சுட்டிக்காட்ட அதன் தன்மையொன்றைக் கீழேயுள்ள முதல் பத்தியில் குறிப்பிடுகிறேன். அந்நிலை அன்னையின் சக்தியைப் பெற்று மாறும் அடுத்த நிலையை அதன் எதிரே எழுதியிருக்கிறேன். இந்த ௯ நிலைகளில் அன்னை சக்தி வந்தால், அங்கு எந்தவிதமான மாற்றம் ஏற்படும் என்பதை விளக்கவே இந்தக் கீழ்க்கண்ட இரு பத்திகளை (**column**) எழுதுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| i) | அது புரியவில்லை, எனக்குப் பிடிக்கவில்லை. | — | இப்பொழுது புரிகிறது, அதனால் பிடிக்கின்றது.* |
| ii) | திக் என்றது. | — | திக்குமுக்காடும்படிச் சந்தோஷம் ஏற்பட்டது. |
| iii) | சொரேர் என்றது. | — | நான் எங்கோ (அதிக உயரத்தில்) போய் விட்டேன். |
| iv) | எனக்குத் தாங்கவில்லை. | — | சந்தோஷம் தலைகால் புரியவில்லை. |
| v) | எல்லாமே போய் விட்டது. | — | பரம திருப்தி. |
| vi) | சோர்ந்து வீழ்ந்து விட்டேன். | — | பெரு நிறைவு பெற்றேன். |
| vii) | உடல் பயத்தால் ஆடிற்று. | — | மெய் சிலிர்த்தது. |
| viii) | பைத்தியம் பிடித்த மாதிரி இருந்தது. | — | சந்தோஷம் தாங்காமல் எழுந்து ஓட நினைத்தேன். |
| ix) | மயக்கமுற்றேன். | — | சந்தோஷம் வந்ததால், பைத்தியம் மாதிரி உளறினேன். |

* குழப்பம் நிறைந்த மனதில் வெறுப்பு இருக்கிறது. அன்னை சக்தி அங்கு வந்தபின் குழப்பம் நீங்கி வெறுப்பு விருப்பமாக மாறுகிறது.



மீண்டும் ஒரு முறை மேலே உள்ள பத்திகளை வேறு வகையாக மேலும் விளக்குவதற்காக எழுதுகிறேன். குறையையும் நிறையையும் குறிப்பிட்டுத் தெளிவுபடுத்த முயல்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| i) | சந்தேகம், கவலை ஒழிந்தன. | — | தெளிவும், தெம்பும் ஏற்பட்டன. |
| ii) | திக்குமுக்காடும் சந்தோஷம் எழுந்தது. | — | மனம் விரிந்து, ஜீவன் பெருக்கெடுத்தது. |
| iii) | செய்வதறியாது திகைத்தேன். | — | உச்சாணிக் கொம்புக்கு உயர்ந்தேன். |
| iv) | சந்தோஷம் தலைகால் புரியவில்லை. | — | ஜீவன் பெருகி, சந்தோஷம் வழிந்தோடியது. |
| v) | ஆழ்ந்த நிறைவடைந்தேன். | — | உணர்வு ஆனந்தப் பெருக்கெடுத்தது. |
| vi) | இனி எதுவும் பொருட்டில்லை என்றுணர்ந்தேன். | — | மனம் லேசாகி, உடல் காற்றில் பறப்பது போலாயிற்று. |
| vii) | உடல் குதூகலத்தால் பதறியது. | — | புத்துணர்வு, பொலிவுடன் உடலில் பரவியது. |
| viii) | ஊரை மறந்து உன்மத்தனானேன். | — | என்னால் முடியாததொன்று இல்லை என அறிந்தேன். |

ix) உலகம் ஒரு பொருட்டன்று என்றிருந்தேன். — வெட்கமறியேன், அன்னைக்காக எதையும் செய்யும் நிலையையடைந்தேன்.

**ஜடம் பெற்ற வரம்:**

பூமி ஜடப்பொருளால் நிரம்பியது. இறைவன் பூமிக்கு அளித்த வரத்தைப் பூமிக்கு மட்டுமே கொடுத்திருக்கின்றான். சிருஷ்டியில் இறைவனை விட்டு அகன்ற ஜடம், தான் விரும்பிய பொழுது இறைவனைத் திரும்ப வந்தடையலாம் என்ற வரப்பிரசாதத்தை ஜடப்பொருளுக்கு இறைவன் சிறப்பான வரமாக அளித்துள்ளான். பல்வேறு வரங்களை இழந்த மனிதன் இந்த வரத்தையும் இழந்து விட்டான். அன்னை, இழந்த வரத்தை மனிதனுக்கு மீண்டும் அழைத்து அளிக்கின்றார். ஆனால் வலியுறுத்திக் கொடுப்பதில்லை. ஒருமுறை கொடுக்கின்றார். இந்த வரத்தைப் பெற அழைப்பு உதவும். அழைப்பு சில சமயங்களில் தீவிரப்பட்டு ஆழ்ந்து ஊடுருவும். அதுபோன்ற நேரங்களில் மனிதன் சிருஷ்டியின் எல்லையைக் கடந்து, ஆதியின் (**Origin**) வாயிற்படிக்கு வருகிறான். அழைப்பின் தீவிரம் வாயிற்கதவைத் திறந்து ஆதியினுள் அவனைச் செலுத்தவல்லது. க்ஷணத்தில் மனிதன் அன்னையை நினைவு கூர்ந்தால், அதாவது ஆதியின் உள் சென்ற கணத்தில் அன்னை நினைவுக்கு வந்துவிட்டால் அழைப்பு ஆதியில் வேரூன்றி விடும். அப்படி விழுந்த வேர் சல்லி வேரானாலும், பின்னால் உயிர் பெறக் கூடியதாகும். அன்னை என்று நாம் அறிவதும், ஆதி என்றுணர்வதும் வெவ்வேறு என்பதைக் கவனிக்க வேண்டும். அழைப்பு ஆதிக்கு அழைத்துச் சென்றது. மற்றோர் அழைப்பு அங்கு வேரூன்றியது. ஆக இவையிரண்டும் வெவ்வேறு என்பது குறிப்பிடத்தக்கது. முதல் அழைப்புக்கும் அடுத்த அழைப்புக்கும் என்ன வித்தியாசம்? ஏன் மறுமுறையும் அழைக்க வேண்டும்? என்ற கேள்விகள் எழுகின்றன. பொதுவான முதல் அழைப்பு ஜீவனை ஊடுருவி ஆதிக்கு நம்மை அழைத்துச் செல்கிறது. ஆதியின் உள் சென்ற அந்த



வரப்பிரசாதம் அத்துடனே மறைந்துவிடாமல் மீண்டும் நாம் விரும்பியபொழுதெல்லாம் கிடைக்க வேண்டுமானால், இன்னோர் அழைப்பு தேவை. ஆதியின் உள்ளே இருக்கும்பொழுது அழைத்தால், அந்த அழைப்பு மீண்டும் உயிர் பெற்று வர முடியும். இது அவசியம். ஆதியின் உள்ளே நுழைவது, நுழைந்தபின் அன்னையை அழைப்பது, மீண்டும் விரும்பிய பொழுது அங்குத் திரும்ப வருவது ஆகியவை யோகத்தில் சிறப்பான சித்திகளாகும். அழைப்பின் திறன் உயர்ந்த காலத்து இந்த உயர்ந்த சித்திகளையும் பெற்றுத் தரும் தன்மை உடையது ‘அழைப்பு’.

இவற்றை எல்லாம் உணர்ந்த பக்தன், தன் மனநிலையைத் தயார் செய்துகொண்ட காரணத்தால், ஒரு வாரம் இடைவிடாது அன்னையை அழைக்கும் நோன்பைத் தொடங்க தகுதியுள்ளவன் ஆகிறான். தான் செய்த முஸ்தீபுகள் அதிகம், பெரியவை என்பதால் தனக்கு எல்லா யோகச் சித்திகளும் கிடைக்கும் என்று நினைப்பது இயல்பு. அது உண்மையில்லை என்பதை முதலிலேயே தெளிவுற உணர வேண்டும். அழைப்பு முக்கியமானது. ஆனால் முடிவானதொன்றில்லை. பயிற்சியும் இன்னும் பல கட்டங்களைத் தாண்ட வேண்டும். பலனும் கடைசிப் பலனாக இருக்காது என்பதை நன்கு தெரிந்திருக்க வேண்டும். இந்த முறைக்கு உரிய சிறப்புகள் இரண்டு, 1. எவரும் இதைக் கையாளலாம், 2. பக்தன் தனக்கு அதிகபட்சம் கிடைக்கக்கூடிய யோக சித்தியை இதன் மூலம் பெறலாம்.

நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால் எல்லோருக்கும் உரிய முறை என்பதாலேயே இம்முறையில் எளிமை ஒரு வகையில் கலந்திருக்கும். எளிமை கலந்திருப்பதால் கடைசிக் கட்ட பெருமைக்கு உகந்தது இம்முறையில்லை. தனக்கு அதிகபட்சம் கிடைக்கக்கூடியதைப் பெற்றுத்தரும் முறை என்பது வேறு, அதிகபட்சப் பலனை அளிப்பது வேறு என்பது தெளிவாக இருக்க வேண்டும்.

எப்படியிருப்பினும், முறையாக அழைப்பைப் பின்பற்றினால் (**Origin**) சிருஷ்டியின் ஆரம்பத்திற்கு — இறைவனிடம் —

அழைப்பு நாம் விரும்பியபொழுதெல்லாம் அழைத்துச் செல்லக் கூடியது. அந்த அளவில் அழைப்புக்கு உயர் தனிச் சிறப்புண்டு.

இம்முறையில் உள்ள குறையையும், சிறப்பையும் குறிப்பிட்டேன். அழைப்பின் பலன் தொடர்ந்து வர வேண்டுமானால், நம் பயிற்சியின் தீவிரம் உச்சக்கட்டத்திலேயே இருக்க வேண்டும். அந்நிலையை அடைந்து, தொடர்ந்தால் அழைக்கும் ஜீவனின் அளவை — ஆழத்திற்கும், சிகரத்திற்கும் உள்ள இடைவெளியை — நாம் அதிகப்படுத்தலாம். ஆழத்திற்கும் போகலாம். உயர்ந்த சிகரத்தை எட்டவும் முயலலாம். அவை எல்லாம் பலிக்க வேண்டுமானால், முயற்சி எந்த நேரத்திலும் தீவிரமான உச்சக்கட்டத்திலேயே செயல்பட வேண்டும்.

அப்படிப்பட்ட ஒரு நோன்பை ஒருவர் மேற்கொள்ளுதல் அருமை, சிறப்பு. ஒரு வாரம் தொடர்ந்து பயிலுதல் சிறப்பின் சிகரம். குடும்பத்தார் அனைவரும் சேர்ந்து ஏற்றுக்கொண்டால் அதன் சிறப்பை உதாரணத்தால் விளக்க ஒரு நிகழ்ச்சி இன்று நாம் வாழும் உலகத்தில் இல்லை. 'ஏதோ உரைப்பன் எதிர்' என்பது போன்றது. அக வாழ்வின் மலர்ச்சி அற்புதமானது. புற வாழ்வின் பொலிவுகள் கணக்கிலடங்கா. ராக்கெட்டின் வேகத்தை எந்தப் பறவையுடன் ஒப்பிட முடியும்? கம்ப்யூட்டரின் திறத்தை எதனுடன் ஒப்பிடலாம்? எந்த வகையாக விளக்கம் அளித்தாலும் மேகத்தின் வர்ணஜாலங்களைக் கலங்கிய சேற்று நீரில் பிரதிபலிப்பால் புரிந்து கொள்வது போலாகும். முடிந்தவரை சொல்லிப் பார்க்கிறேன்.

மனத்தில் கவலை என்பதென்ன என்று அறிய முடியாத அளவுக்குக் கனிவும், கருணையும் நிறைகின்றன. அவற்றின் விளைவாக, புற வாழ்வில் பிரச்சனையின் சுவடுகளே அற்றுப் போகின்றன. ஆன்மீகச் சிறப்புகளான மௌனம் மனத்தைத் தேடி வந்து தங்கிவிடும். சாந்தம் நமக்கேயுரியதாகிறது. சந்தோஷம் பெரு நிறைவு பெறுகிறது. ஆனந்தம் என்பதை அடிக்கடி உணருகிறோம். செயல்திறன் சிறக்கும். அவை வாழ்விலும் பிரதிபலிக்கின்றன. புத்தியில் புதிய எண்ணங்கள், இதுவரை உலகத்தில் உதயமாகாத கருத்துகள் தோன்றும்.



வாழ்க்கை ஒவ்வொரு செயலிலும் நமக்கு மகுடம் அளிப்பதையே தன் கடமையாக ஏற்றுக்கொள்ளும். வாழ்க்கை நிலையுயர்ந்து, அந்தக் கட்டத்திலும் வெற்றிக்கு மட்டும் உரியவராகிறோம். நம் வாழ்க்கை சிறியதானாலும், பெரியதானாலும் அளவோடு கூடியது. அந்த வரையறைக்குள் நமக்கு முழு அதிகாரம் ஏற்படும். 'விரல் அசைந்தால் வீடு அசையும். உதடு அசைந்தால் ஊர் அசையும்' என்பதை நிதர்சனமாகப் பார்க்கிறோம்.

அகத்தின் தெளிவு புரியும். புறத்தின் சிறப்பை உணரலாம். என்றாலும் நம் வாழ்வில், நம் வீட்டினுள் ஏற்படும் நிகழ்ச்சிகளே விளக்கமாக இருப்பதை நாம் உணருவோம். என் மனம் எப்படி இருக்கும்? வீட்டில் அன்றாடம் வாழ்க்கை எப்படி அமையும்? நான் சந்திக்கும் நபர்கள் எப்படி என்னிடம் நடந்து கொள்வார்கள்? வருமானம் என்ன ஆகும்? என்றெல்லாம் மனம் கேள்வியை எழுப்பும். இதையும் ஓரளவுக்குச் சொல்லலாம். அப்படிச் சொன்னால் சில விஷயங்கள் தடம் மாறிப் போகும். மற்றவை கோணலாக இருக்கும். வேறு சில வினோதமான தவறுகளை ஏற்படுத்தும். பெரிய காரியங்களைச் சிறிய நிகழ்ச்சிகள் மூலமாகச் சொன்னால் நாம் சிறிய பலன்களை நாடுவது போல் தோன்றும். நம் சிற்றூரில் சென்ற வருஷம் ஆரம்பித்துள்ள கல்லூரியில் **M.A.** படிப்பதைவிட தாம்பரம் கிறித்துவக் கல்லூரியில் சேர்வது சிறப்பு என்ற கருத்தை வலியுறுத்த அந்தக் கல்லூரி ஹாஸ்டல் சாப்பாட்டின் பெருமையை விளக்குவது போலாகும். ஒருவருடைய நாணயத்தின் உயர்வை வலியுறுத்த அவருடைய குரல் கவர்ச்சியைக் காரணமாகக் காட்டுவது போன்று இருக்கும். உயர்ந்த மனிதன் இவர் என்பதை அவர் பெற்ற பட்டத்தின் உயர்வால் விளக்கினால் பல சமயங்களில் அது தவறாகிறது. அவர் பெற்ற செல்வத்தின் அளவால் விளக்கினால் — அதில் ஓர் உண்மை இருந்தாலும்-கூட — விளக்கம் விபரீதமாகும். 'அவருடைய எடை 240 பவுண்டு அதனால் எவ்வளவு உயர்ந்த உள்ளம் உடையவர் என்று பார்த்துக் கொள்ளுங்கள்' என்பது போலிருக்கும்.

வேறு வழியில்லாததால், இருக்கும் உபாயங்களைக் கொண்டு சொல்கிறேன். சொல்லும் மனப்பாங்கை மட்டும் ஏற்கும் நோக்குடன் புரிந்துகொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

1. குடும்பத் தலைவரின் வருமானம், குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் வந்தால் எப்படியிருக்குமோ அது போன்ற வருமானம் ஏற்படும்.
2. குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் தலைவருக்கு உரிய பொறுப்புணர்ச்சியை ஏற்றுக்கொண்டது போல் குடும்பம் உயர்ந்துவிடும்.
3. வாழ்வில் ஒருமுறை வரும் பெருநிறைவு, அன்றாட நிகழ்ச்சியாகி அதற்குரிய சிறப்புகளைச் சேர்க்கும்.
4. வாழ்வின் அடுத்தக் கட்டத்திற்கு நாம் உந்தித் தள்ளப்படுவோம்.
5. அன்றாடச் சாப்பாடு, விசேஷ தின விருந்தாக மாறும்.
6. உடுத்தும் உடையெல்லாம் உயர்ந்த உடையாகும். தினமும் பட்டு உடுத்துவது போலாகும்.
7. ஒரு நாள் ஒரு க்ஷணமாகத் தோன்றுமளவுக்கு உள்ளம் பூரிக்கும்.
8. நமக்கு முக்கியத்துவம் வந்துவிடும்.
9. முக்கியமானவர்களைத் தொடர்ந்து சந்திக்கும் சந்தர்ப்பங்கள் வந்தபடியிருக்கும்.
10. சில்லரையை எடுத்த கை சிறிய பவுன் காசை எடுக்கும்.
11. நம்மவர் அன்னியோன்யமாக அளவளாவி மகிழ்வர்.
12. வீடு திருமாளிகையாகக் காட்சியளிக்கும்.
13. கண்ணில் படுபவரெல்லாம் காட்சிக்கு இனியவராக இருப்பார்கள்.
14. நினைத்ததை மற்றவர் நிறைவேற்றுவார்கள். உத்தரவு, ஒலிபரப்பிய சட்டமாகும்.



15. முகம் மலரும்; புன்சிரிப்பு புனித ஒளியாகும்.
16. எண்ணம் இலக்கியமாகும். இலட்சியம் தன் நிறைவு பெறும்.
17. பேச்சு நட்பாகும். நண்பர் பிசிராந்தையாராவார்.
18. உண்ணீரும் ஊற்று நீராகும். பருகுவதெல்லாம் அமிர்தம் ஆகும்.
19. சாப்பாடு திரு அமுதமாகும்.
20. தெய்வமே தாயாக வருவதால், தாயாரே தெய்வமாவார்.
21. கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகும். மாணிக்கம் மனிதனுக்குக் கல் போன்றதாகும்.
22. கடுமையும் இனிக்கும். கனிவு ஏற்பட்டபின் கனிவு மட்டும் கசியும் இதயத்தில், கருணை மழை பொழிவதை மயிர்க் கூச்செரியும் உடல் வெளிப்படுத்தும்.
23. பெருந்தலைவருக்குரிய பெருமையும், பெருந்தன்மையும் இனிமையாக வெளிப்படுவதை பிறர் சொல்லக் கேட்டும் நம்பமுடியாது.
24. நாம் கல்லானாலும், புல்லானாலும் பிறருக்குத் தெய்வமாகவே காட்சியளிப்போம். (பிறர் கருத்தை நாமே நம்பி விட்டால், கல்லும் புல்லும் நிலையாக வந்துவிடும்).
25. நம் மனத்தில் பொய்யும், குறையும் அற்றுப்போனதால், உலகிலேயே அவை அழிந்துவிட்டதாகத் தோன்றும்.
26. உள்ளம் தெய்வம் உறைவிடமாகும்; உடல் திருக்கோயில் ஆகும்.
27. தினமும் தீபாவளியாக இருக்கும்.

**பயிற்சி முறை:**

வீட்டில் உள்ள அனைவரும் அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லையானால், ஒருவர் மட்டும் ஆரம்பிக்கலாம். இந்த முறையை எப்படி ஆரம்பிப்பது என்பதைப் பல பகுதிகளாகப்

பிரித்து, அவற்றை வரிசைக்கிரமமாக எழுதுகிறேன். பூரண நம்பிக்கையுள்ளவர்களுக்கே உரியமுறை இது. அதுவே அடிப்படை.

1. குறிப்பிட்ட நேரத்தை — ஒரு மணி அல்லது அரை மணி — ஒதுக்கி, நாள்தோறும் தவறாது அதே நேரத்தில் பயில வேண்டும். முதலில் Mother, அன்னை, அம்மா என்பன-வற்றில் ஒன்றை வாயால் தொடர்ந்து உச்சரிக்க வேண்டும்.
2. சில நாட்களுக்குப்பின், வாயால் சொல்வதைப் படிப்படியாக நிறுத்திவிட வேண்டும்.
3. மனதால் செய்யும் உச்சாடனம் மனத்தை முழுமைப்படுத்தி நிரப்புவதையும், அதிலிருந்து பெருகி வாழ்வில் ஓடி வருவதையும் பார்க்கலாம்.
4. மனம் நிறைந்தபின் (after saturation of mind) மனதால் சொல்வதை லேசாக மாற்றி நெஞ்சால் (heart) சொல்ல ஆரம்பிக்க வேண்டும்.
5. நெஞ்சம் நிரம்பி வழியும் நிலை வந்தபின், உச்சரிப்பை நிறுத்திக் கொண்டால், தானே Mother என்ற சொல் தானாக நெஞ்சிலிருந்து உற்பத்தியாகும். அதுவே அழைப்பு.

தொடரும்...

❁❁❁

**ஜீவிய மணி**

**ஆண்டவனிடமிருந்து தப்பிக்க, அருளை மறுக்க, துரோகம் செய்ய மனிதன் தன் மேதாவிலாசத்தால் முயல்வது இறைவனின் பேரருளுக்குச் சமம். மனிதனைப் பிடிக்க இறைவன் முயல்வதும், தப்பிக்க மனிதன் முயல்வதும் லீலையாக மாறிவிட்டன.**



## அன்பர் அனுபவம்

ஜெயந்தி, அம்பத்தூர்

ஸ்ரீ அன்னையின் பாதங்களில் பணிந்து இக்கடிதத்தை சமர்ப்பணம் செய்கிறேன்.

என் பெயர் ஜெயந்தி. நாங்கள் சென்னையில் உள்ள அம்பத்தூரில் வசித்து வருகிறோம். எனக்குத் திருமணமாகி ஐந்து வருடங்கள் ஆகின்றன. என் மூன்று வயதான முதல் பையனின் பெயர் கார்த்திக். அவனுக்கு வலது நெற்றியில் ஒரு சிறிய கட்டி வந்தது. நாங்களும், வெய்யில் காலத்தில் வரும் கட்டி என்று நினைத்து, அதை விட்டுவிட்டோம். இப்படியே ஓரிரு நாட்கள் செல்லச் செல்ல அந்தக் கட்டி மிகவும் பெரியதாக மாறி, அவனது நெற்றிக்கு கீழுள்ள கண்கள் உள்ளே மூடி, மூக்கு மற்றும் கன்னம் மிகவும் பெரிதாக உப்பிவிட்டது. இதனால் அவனுடைய முகம் மிகவும் விகாரமாகக் காட்சி-யளித்தது. காலையிலும், மாலையிலும் வீக்கம் வற்றவும், அதிகமாகவும் மாறி மாறி இருந்து வந்தது. அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் குழந்தையின் அழகே போய்விட்டது. அவனை டாக்டரிடம் அழைத்துப் போங்கள் அல்லது கட்டிக்கு தேவை-யான நாட்டு வைத்தியமாவது செய்யுங்கள் என்று என்னை அனைவரும் திட்டினார்கள். எதையுமே பொருட்படுத்தாமல் ஸ்ரீ அன்னையின் முன்பு அமர்ந்து இந்தக் குழந்தையை தங்களிடம் சமர்ப்பணம் செய்கிறேன். உங்கள் கண் பார்வையில் உள்ள ஒளியானது இவனுடைய முகத்தில் பட்டு இவனுக்கு பழைய முகத்தைத் தாருங்கள் என்று வீட்டில் பிரார்த்தனை செய்வேன். பின்பு நாள்தோறும் அவனை தியான மையத்திற்கு அழைத்துச் சென்று வந்தேன். இதற்குள் ஒருநாள் காலை என் தங்கை அம்பத்தூர் தியான மையத்தில் குழந்தைக்கு நிகழ்ந்-ததைக் கூறி இன்னும் எப்படி அன்னையிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்றும் கேட்டிருக்கிறாள். அதற்கு அவர்கள் நேற்று உங்கள் அக்கா குழந்தையை அழைத்துக் கொண்டு

இங்கு வந்தார்கள். அவன் முகத்தைப் பார்க்கவே மிகவும் கஷ்டமாக இருந்தது. நீங்கள் தினமும், ஊதுபத்தி ஏற்றி அன்னை முன்பு அமர்ந்து 'அவன் உங்கள் குழந்தை அவனை கஷ்டப்படுத்தலாமா? வலி, வேதனை எதுவும் இல்லாமல் அவனுக்குக் கட்டி குணமாகி, பழைய திருமுகத்தைத் தாருங்கள் அம்மா என்று காலை, மாலை மற்றும் இரவு ஆகிய மூன்று வேளைகளிலும் பிரார்த்தனை செய்யுங்கள்' என்றார். அவர்கள் கூறியபடியே நானும் என் தங்கையும் அன்னையிடம் தீவிரமாகப் பிரார்த்தனை செய்தோம். பிரார்த்தனை செய்த மூன்றாம் நாளில் அன்னையின் அருளால் கட்டி குணமாகி, வீக்கம் வற்றி, கட்டி வந்த சுவடே தெரியாமல் அவனுக்குப் பழைய அழகிய திருமுகம் கிடைத்தது. உடனே அன்னைக்கு நன்றி தெரிவிக்க குழந்தையை அழைத்துக் கொண்டு தியான மையத்திற்கு சென்ற பொழுது, அவர்கள் என் பையனை பார்த்து அன்னையின் அருளால் கட்டி வந்த இடமே தெரியவில்லை. மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது என்றார்கள். அன்னைக்கும், அன்னை ரூபத்தில் எனக்குப் பிரார்த்தனையை சொன்ன அம்பத்தூர் அன்பருக்கும் எங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேபோல் என்னுடைய இரண்டாவது மகன் ரித்தீஷ். அவனுக்கு 1½ வயது ஆகிறது. அவன் ஒரு இருதய நோயாளி. அவனுக்கு ஒரு மாதத்திற்கு முன்பு சளி மற்றும் இருமல் வந்தது. உடனே 'அன்னையே! இவனுக்கு ஒரு வாரமாக இந்த தொந்தரவு இருந்து வருகிறது. இவனை டாக்டரிடம் அழைத்துப் போக மாட்டேன், மருந்து, மாத்திரை எதுவும் கொடுக்க மாட்டேன். இவனுக்கு எப்பொழுது நீங்கள் மரணத்திலிருந்து மறு வாழ்வு கொடுத்தீர்களோ, அந்த நிமிடமே இவன் உங்கள் குழந்தை. இவனைப் பரிபூரணமாக உங்களிடம் சமர்ப்பணம் செய்துவிட்டேன். உங்களின் சக்தியால் மட்டுமே இவன் குணமடைய வேண்டும். இதுவே என்னுடைய பிரார்த்தனை' என்று அன்னையிடம் மனமுருகி வேண்டினேன். என் வேண்டுதலை அன்னை உடனே நிறைவேற்றினார்.



இங்கு நான் முக்கியமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஸ்ரீ அன்னையின் அருளால்தான் என் குழந்தைக்கு நான்கு மாதத்தில் இருதய ஆப்பரேஷன் நல்ல படியாக முடிந்தது. இந்த ஆப்பரேஷனுக்குத் தேவையான மொத்த பணமான ரூபாய் 2.75 லட்சத்தைக் கொடுத்து உதவிய திரு. நாராயணன், திருமதி கீதா ராணி அவர்களுக்கும், திரு. தாயுமானவர், திருமதி பிரேமா அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை எங்கள் குடும்பத்தின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுதவிர, அன்னையின் அருளால் ஆப்பரேஷன் நல்லபடியாக முடித்துக் கொடுத்த இரண்டு டாக்டர்களுக்கும், அன்னைக்கு உண்மையாக சேவை புரிந்த என் அப்பா அவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோல் அன்னை எனக்கு அருளிய ஒரு நிகழ்ச்சியை இங்கு விளக்கக் கடமைப்பட்டுள்ளேன். எனக்கு முதல் பிரசவம் முடிந்த ஒரு வருடத்திலேயே இரண்டாவது பிரசவமும் நடந்து விட்டது. இதனால் உடலில் தெம்பு குறைந்திருந்தது. இதற்கு எப்படி பிரார்த்தனை செய்வது என்று அம்பத்தூர் அன்பரை அணுகிக் கேட்டேன். அதற்கு அவர்கள் தினமும் ஒரு டம்ளரில் தண்ணீர் மற்றும் அதில் துளசி போட்டு அன்னையின் முன்பு வைத்து, நம்பிக்கையுடன் நாள்தோறும் பிரச்சனையின் வரலாற்றை அன்னையிடம் கூறி அதைக் குடிக்குமாறு கூறினார். நானும் அதேபோல் செய்தேன். என்ன ஆச்சரியம்! பிரார்த்தனை ஆரம்பித்த ஒரு வாரத்திற்குள் உடல் நன்கு குணமாகியது. நானும் முன்போல் தெளிவாகி விட்டேன். இவைகள் அனைத்திற்கும் காரணமான அன்னை மற்றும் பகவான் ஸ்ரீ அரவிந்தருக்கு எங்கள் நன்றியை மனதாரத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் எங்களின் துயர் தீர்க்க வழி காட்டிய அம்பத்தூர் அன்பர்களுக்கும் எங்கள் நன்றியை மனதாரத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

## 99. அன்னை தரிசனத்தில் பகவான் ஸ்ரீ அரவிந்தராக மாறுகிறார்.

- பகவான் அன்னையின் ஜீவனில், ஆத்மாவில் உறைகிறார். அன்பர் பார்வை ஊடுருவி பகவானைக் காண்கிறது.
- பார்வைக்குச் சூட்சுமமிருந்தால் பார்த்ததை ஊடுருவும் திறனுண்டு.
- சப்தத்திற்கும் சூட்சுமமுண்டு. பேரம் பேசும்பொழுது வாங்குபவர் எதைச் சொன்னாலும், அவர் குரல் அவர் மனதிலிருப்பதைக் கூறும். கேட்பவருக்குச் சூட்சுமமிருந்தால் அது தெரியும்.
- மூக்குக்கும் சூட்சுமம் உண்டு. எந்தப் பொருளும் அதன் இரகஸ்யத்தை வாசனையால் கூறி விடும்.
- நாக்குக்கும் சூட்சுமமுண்டு. சாப்பிடும் பொருள் அதன் இரகஸ்யத்தை வெளியிடும்.
- உடலுக்கும் சூட்சுமமுண்டு. உடலை விட்டு சூட்சும உடல் வெளிவரக் கூடியது.
- ஒரு பணக்கார நண்பர் அன்பருக்கு பட்சணம் அனுப்பினார். யார் அனுப்பியது என அறியாமல் நண்பர் சாப்பிட ஆரம்பித்தார். துர்நாற்றம் வீசியது. அது பட்சணம் செய்த குடும்ப வாசனை.
- அல்வா செய்வதில் பிரபலமான சமையல்காரனை அழைத்து அன்பர் அல்வா செய்யச் சொன்னார். அது **Gas** வந்த புதிது. அவர் எனக்கு **Gas** அடுப்பு சரி வராது. செங்கல் அடுக்கி, விறகு எரித்தால்தான் பதம் வரும் என்றார். செய்து முடித்தபின் அன்பர் வீட்டில் அனைவரும் சாப்பிட ஆரம்பித்த பொழுது அதிலிருந்து கோதுமை, நெய், அல்வா வாசனை வரவில்லை, அழுகிய வாடை வந்தது.



உலகம் போற்றும் ருசி அன்பருக்கு அழுகிய பண்டம்.

- பிரான்சிலிருந்து உலகப் பிரசித்தி பெற்ற போட்டோகிராபர் இந்தியா வந்து எல்லா ஊர்கட்கும் போய் போட்டோ எடுத்து **Life** என்ற பிரசித்தி பெற்ற பத்திரிக்கையில் வெளியிட்டார். பகவானை போட்டோ பிடிக்க விரும்பினார். அன்னை சம்மதப்பட்டபொழுது, போட்டோ எடுப்பவரால் பகவான் முன் நிற்க முடியவில்லை. உடல் பதட்டமாக கை நடுங்குகிறது. அப்படமே இப்பொழுது பகவான் படமாக வழங்குகிறது. படத்தைப் பார்த்த அன்னை ஆசிரம போட்டோ கிராபர்களைவிடச் சிறந்ததாக இருக்கும் என நினைத்தேன். அதுபோலும் இல்லை என்றார். டிசம்பர் 5, 1950-இல் அன்னை ஆசிரம போட்டோக்காரர்களையே படம் எடுக்கச் சொன்னார்.

அன்னை ஜீவியம் இவ்வுலகத்தைக் கடந்தது.

எந்த ஆபீசிலும் அன்பரிருந்தால் அவரே சிறப்பானவராக இருப்பார்.

**Accountant General** ஆபீசில் கிளார்க்காக வருபவர் சீனியர் கிளார்க்காகி ரிடையர் ஆவது குறைவு.

சூப்பிரிண்டெண்ட்டாக பெரும்பாலும் ஓய்வு பெறுவார்.

திறமை, அறிவுள்ளவர், அக்கௌண்ட்ஸ் ஆபீசர்வரை உயர்வதுண்டு.

அதற்கு மேல் **Deputy Accountant General, Assistant Accountant General** என உயர்வு பெற இரு பதவிகள் உண்டு.

அன்பர் **B.Sc.,**யில் **II Class** வாங்கியவர் **Deputy Accountant General** ஆக ரிடையரானார்.

தங்க நகை, தங்கமானது, தங்க முலாம் பூசுவதுண்டு.

கவரிங் செய்வதுண்டு. உலகம் முலாம், கவரிங்காலானது.

அன்பர் கட்டித் தங்கம்.

அதை அன்பரே அறிவதில்லை.

அறிந்தால் நம்புவதில்லை.

இந்த அம்சம் யோக அம்சம் என்றால் நம்ப முடியுமா?

## அஜெண்டா

### தற்கொலையும் நிர்வாணமும் அந்தந்த நிலையில் சமமானவை

Volume 10, page 103

- சேவை, விஸ்வாசம், ஒத்துழைப்பு, எதிர்ப்பு, தற்கொலை, சுயநலம் என்பவை பல நிலைகளில் உண்டு. நிலை எதுவானாலும் மனநிலை ஒன்றே.
- பாலுக்குச் சர்க்கரையில்லை என்பதும், கூழுக்கு உப்பில்லை என்பதும் ஒரே கவலை.
- வண்டியில் காற்றில்லை என்பதும், வகுப்பில் போர்டு தெரியவில்லை என்பதும் ஒன்றே.
- மகான் தவம் செய்து உலகை விட்டு மோட்சம் போவதும் இளைஞன் அமெரிக்கா போய் குடும்பத்தைக் கைவிடுவதும் சமம்.
- தற்கொலை என்பது வாழ்வை நடத்த முடியாமல் முடித்துக் கொள்வது.

  நிர்வாணம் என்பது மனம் கரைந்த நிலை.

  கரைந்த நிலையில் பிரச்சனை இருக்காது.

  தூங்கும் பொழுது கவலையை மறந்திருப்பது போல் இருக்காது.

  மகான் தவம் பலித்த நிலையில் நிர்வாணம் எய்தினால், மனமே கரைந்து மனத்தின் பிரச்சனைகளிலிருந்து விடுபட்ட சுதந்திரம் தெரியும்.

  கரைவதன்முன் மனம் எல்லாப் பிரச்சனைகளையும் எதிர்கொள்ளும்.

  எல்லாப் பிரச்சனைகளையும் எதிர்கொண்டு சமாளிப்பதை விட நிர்வாணம் சுதந்திரம் தரும்.

  அதை ஏற்பது தற்கொலைக்குச் சமம் என்கிறார் அன்னை.
- கம்பெனி முதலாளி நிர்வாகச் சுமை தாங்காமல் ஓய்வு பெறுவது கம்பெனிக்குத் துரோகம்.



- எதிரியின் பலம் அதிகமாக இருப்பதால், போரிட முடியாது என்று சரணடைவது தவறு.
- நான்கு வருஷம் டாக்டருக்குப் படித்தவன் பரீட்சைக்குப் பயந்து எழுதாவிட்டால் நான்கு வருஷப் படிப்பு வீணாகும்.
- குடும்ப பாரத்தை ஏற்க மறுத்துத் திருமணம் செய்துக் கொள்ளாமலிருப்பவருண்டு.
- கட்சி அபரிமிதமாக வெற்றி பெற்றபின் நிர்வாகப் பொறுப்புக்குப் பயப்படும் தலைவர்கள் உண்டு. அவர்கள் நாட்டுத் தலைவரானால் சிறிது காலத்தில் இறந்து விடுவார்கள்.
- போர்க்களத்தில் சிப்பாய் போரிட பயந்து பின்வாங்க முடியாது. ஏனெனில், திரும்பினால் அவன் கட்சி சிப்பாயே அவனைச் சுட்டு விடுவான்.
- பொறுப்பு பெரியது.

  கிடைத்தற்கரியது என்றாலும், ஏற்க பயப்பட்டு ஓடி ஒளிவது உலக இயற்கை.

  நிர்வாணமும், மோட்சமும் ஒரு வகையில் அதுபோன்றவை என்பது அன்னையின் கொள்கை.
- சர்க்கார் பதவியை ஏற்று சேவை செய்யலாம், பதவியை ஏற்று கொள்ளையடிக்கலாம், சேவை செய்வதற்குப் பதிலாக துரோகம் செய்யலாம். எதுவும் செய்யாமல் நாட்டைக் கைவிடலாம். இல்லாத பொறுப்பையும் ஏற்று தலைவராகி, பெருந்தலைவருமாகலாம்.

### ஜீவிய மணி

**வாழ்வை விளக்கும் அறிவு, உயிர் பெற்ற அறிவு.**

**பிராணனில் விழித்த மனம், அறிவால் வாழ்வைப் புரிந்து கொள்ளும்.**

# நல்லதோர் வீணை செய்து

(சென்ற இதழின் தொடர்ச்சி)

இல. சுந்தரி

சமூகத்தின் சங்கடங்களிலிருந்து விடுதலை பெற மனைவி என்ற தகுதியை அவர் எனக்குத் தந்தார். ஆர்த்தியைக் கருவில் சுமந்த காலத்தில் முற்றிலும் தெய்வீகமான சூழ்நிலையிலிருந்தேன். சேற்றில் செந்தாமரை முளைக்க வேண்டுமென்று ஆசைப்பட்டேன். என்மகள் யாராலும் தீண்ட இயலாத கனலாக இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டேன். என் கணவரிடம் என் விருப்பத்தைக் கூறினேன். அவர் 'நீ ஏன் இந்தத் துறையை விட்டு விலகிவிடக் கூடாது?' என்றார்.

ஆனால் பழகிவிட்டதால் என் கலைமீது எனக்குள்ள ஆர்வத்தை விட முடியவில்லை. அதேசமயம் நான் பட்ட ரணங்களும் மறக்க முடியவில்லை. என்னைப் பொறுத்தவரை எதிர்நீச்சல் போடுவது என்று முடிவு செய்தேன். ஆனால் என் குழந்தை - அது ஆணோ, பெண்ணோ அதற்கு என் அவஸ்தைகளில்லாத தூய வாழ்வு அமைய வேண்டும் என்றாசைப்பட்டேன். எனவேதான் ஆர்த்தி கருவானது உறுதியானதும் முதலில் கருவைக் கலைத்துவிடத்தான் எண்ணினேன். ஆனால் இறைநியதி வேறுவிதமாய் இருந்தது. தெய்வாதீனம் என்பார்களே அது என் வாழ்வில் நிகழ்ந்தது. அதனால் ஒரு தெய்வீகச் சூழலில் தங்கி ஆர்த்தியைப் பெறும் பேறு பெற்றேன்.

'ஆர்த்தியின் பிறப்பில் சுவையான நிகழ்ச்சி ஏதோ நிகழ்ந்திருக்கிறதா?' என்றாள் ஆர்வம் பொங்க.

'ஆமாம் சுபா. அதைச் சொல்ல நேரம் வந்துவிட்டது. ஒருவேளை என் குழந்தை என்னை அன்புள்ள அம்மாவாக ஏற்காமலேயே நான் இறக்க நேர்ந்தால் நீ இதை அவளுக்குச் சொல்லிவிடு. அப்போதுதான் என் பிராணன் அமைதியுறும்' என்று உருக்கத்துடன் கூறினாள் சுமதி.

'அப்படி ஒரு நாளும் நேராது சுமதி. இனிமேல்தான் அவள் உன்னை மிகவும் நேசிக்கப் போகிறாள்' என்று உறுதியுடன் கூறினாள் சுபா.

'நான் கருவைக் கலைப்பது என்று முடிவெடுத்ததும் என் நெருங்கிய தோழி டாக்டர் தேவிக்குப் போன் செய்தேன்'.

★★★★★

'ஹலோ! வசந்தி, ஏது இத்தனை தூரம்? என்னை உனக்கு நினைவுகூட இருக்கிறதா என்ன?' என்று உரிமையுடன் வரவேற்றாள் டாக்டர் தேவி. இவள் M.B.B.S., M.D.,-யாவும் முடித்து 'சூப்பர் ட்ரீட்மெண்ட் கிளினிக்' என்ற அந்த மருத்துவமனையையும் கட்டி நிர்வாகம் செய்கிறாள்.

'இங்கு சென்னையிலிருக்கும் என் பழைய மேலதிகாரி தமக்கு உடல்நலக்குறைவு என்று என்னை வரும்படி அழைத்திருந்தார். அதன் பொருட்டு வந்தேன். போகும்போது உன்னை நலம் விசாரிக்க வந்தேன். எப்படியிருக்கிறாய்? வீட்டில் யாவரும் நலந்தானே?' என்றாள் வசந்தி.

யாவரும் நலந்தான். 'நீதான் எங்கும் வருவதில்லையென்று சாமியார் போல் வாழ்கிறாய். வேடிக்கையைப் பார். நீ எம்.ஏ. படித்தாய். நானோ எம்.பி.பி.எஸ் படித்தேன். உடல் நலமில்லாதவர் என்னை அழைக்காமல் உன்னை அழைக்கிறார்' என்று கூறிச் சிரித்தாள் டாக்டர் தேவி.

'என்ன செய்வது தேவி. உன் மருத்துவத்திற்கு உடற்கூற்றினைப் பற்றிய அறிவு வேண்டும். என் மருத்துவத்திற்குச் சுயக்கட்டுப்பாடும், பூரண இறையார்வமும் வேண்டும். எல்லோரும் டாக்டரை மட்டுமே நம்புவதில்லை. சிலர் கடவுளை மட்டுமே நம்புகின்றனர்' என்று வசந்தியும் பதிலுக்கு வேடிக்கையாய்க் கூறிச் சிரித்தாள்.

‘ஆனால், வசந்தி, டாக்டரை நோயாளிகள் நம்பினாலும், டாக்டர்கள் கடவுளைத்தான் நம்புகிறோம். நீ இங்கு வந்தால் இந்தச் சூழலில் ஒரு சக்தி வருகிறது. அதனால்தான் வீட்டிற்கு வராவிட்டாலும் கிளினிக்குக்கு மட்டுமாவது வந்துபோ என்கிறேன். உன் நம்பிக்கையும், முயற்சியும் எனக்கில்லை என்பது உண்மைதான்’ என்று பேசிக் கொண்டிருந்த போதே, தேவிக்குப் பிரபல திரைப்பட நடிகை சுமதியிடமிருந்து போன் வந்தது.

“ஹலோ தேவி! சுமதி ஹியர்” என்றாள்.

“யா, யா தேவிதான் சொல் சுமதி” என்றாள் தேவி.

“நான் கருவைக் கலைத்துவிட விரும்புகிறேன் தேவி” என்றாள் சுமதி.

இப்போது தேவிக்கு ஒரு யோசனை தோன்றியது. போனைக் கையால் மூடிக்கொண்டு, வசந்தியைப் பார்த்து, ‘வசந்தி! உனக்கொரு கேஸ் தரவா?’ என்றாள்.

‘உன்னால் குணப்படுத்த முடியாத கேஸா?’ என்றாள் விளையாட்டுச் சிரிப்புடன் வசந்தி.

‘உண்மையில் இது என்னால் குணப்படுத்த முடியாத கேஸ்தான். சொல் வசந்தி. இந்தப் பெண்ணை உனக்கு அறிமுகம் செய்து வைக்கவா’ என்று பேரார்வத்துடன் கேட்டாள். சுமதியின் அன்புக்கும், நம்பிக்கைக்கும் உரிய தோழி டாக்டர் தேவி. தேவியின் மதிப்புக்கும், மரியாதைக்கும் உரிய தோழி வசந்தி. எனவே, முன்பே தன் கருவைப்பற்றிய ஆர்வத்தையும், வேதனையையும் தன்னிடம் கூறியுள்ள சுமதிக்கு நல்லது செய்ய டாக்டர் தேவி பெரிதும் ஆசைப்பட்டாள்

‘இறைவனின் கருத்து எதுவோ அதற்கு நான் உடன்படுவேன்’ என்றாள் வசந்தி.

‘சரி! உன் இறைவனிடம் கேட்டுச் சொல்’ என்று கூறி அவள் சமர்ப்பணம் செய்து பதில் கூறட்டும் என்ற முடிவுக்கு வந்து,



‘ஹலோ சுமதி! ஒரு அரைமணி நேரம் பொறுத்துக் கொள்ள வேண்டும். உனக்காக இங்கொரு முக்கியமானவருடன் ஒரு ஆலோசனையில் கலந்து கொண்டிருக்கிறேன். மீண்டும் உன்னை போனில் கூப்பிடுவேன். எங்கும் போக வேண்டாம் ப்ளீஸ் சுமதி’ என்றாள்.

‘சரி தேவி, நான் உன் போன்காலுக்குக் காத்துக் கொண்டிருக்கிறேன்’ என்று போனை வைத்துவிட்டாள்.

‘வசந்தி! இது என் ஆபீஸ் ரூம். இங்கு யாரும் வரமாட்டார்கள். நான் வெளியில் இருக்கிறேன். நீ சமர்ப்பணம், தியானம் இவற்றை முடித்துவிட்டு என்னைக் கூப்பிடு’ என்று கதவைச் சாத்திவிட்டு வெளியே வந்தாள்.

பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு மிகுந்த புத்துணர்வுடன் சமர்ப்பணம், தியானம் முடித்து எழுந்தாள் வசந்தி.

‘ப்ளீஸ் தேவி! கம் இன்’ என்று அழைக்கவே தேவி புஷ்டோரை மெல்லத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள்.

‘என்ன வசந்தி, ஓ கே. வா? அந்தப் பெண்ணை நீ சந்திக்க ஏற்பாடு செய்யவா? உன்னைத் தனியே சந்தித்தால் அவள் மனம் திறந்து பேசுவாள்’ என்றாள் தேவி.

‘ஏற்பாடு செய் தேவி. அந்தப் பெண்ணைச் சந்தித்துப் பேசுகிறேன்’ என்றாள் வசந்தி.

‘ஹலோ சுமதி! ஐயம் தேவி ஹியர் என்றாள். ஹலோ தேவி! உனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன்’ என்றாள் சுமதி. அவள் குரலில் கவலை, பதற்றம், குழப்பம் யாவும் தெரிந்தது.

‘பதற்றம் வேண்டாம் சுமதி. இங்கு ஒரு தெய்வீகமான பெண்ணை நீ சந்திக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். கிளினிக்கில் கூட்டமிருப்பதால் பக்கத்தில் லோட்டஸ் காம்ப்ளெக்ஸில் ரூம் புக் பண்ணிவிட்டேன். ரூம் நம்பர் பத்து. நீ உடனே புறப்பட்டுவா. ரூமில் வசந்தி மட்டும் உனக்காகக் காத்துக் கொண்டிருப்பாள்’ என்றாள்.

‘தாங்க்யூ, தாங்க்யூ, சோ மச் தேவி, நான் உடனே புறப்பட்டுவிட்டேன்’ என்று கூறி புறப்பட்டு விட்டாள் சுமதி.

லோட்டஸ் காம்ப்ளெக்ஸின் பத்தாம் எண் அறைக் கதவைத் திறக்கும்வரை சுமதிக்கு ஒரே படபடப்பு. நான் யாரைச் சந்திக்கப் போகிறேன். தெய்வீகமான பெண் என்றாளே. யாரேனும் துறவியாய் இருக்குமோ, என்று எண்ணியவண்ணம் கதவைத்திறந்து ‘உள்ளே வரலாமா?’ என்று பணிவாகக் கேட்கிறாள்.

‘உள்ளே வரலாம்’ என்று அழைக்கும் அழைப்பே முன் எப்போதும் கேட்டிராத இனிமையாய், தெய்வீகமாய் இருந்தது. கோயில் கருவறைக்குள் சென்றது போல் போலியான புறம் கரைந்து, உண்மையான அகம் வெளிப்பட்டது போல் ஓருணர்வு எழுகிறது.

புன்னகை தவழும் முகத்துடன் சாந்தமே வடிவாய் எதிரே நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள் அந்தப் பெண். கதவைத் திறந்து உள்ளே வந்த என்னை வரவேற்பதுபோல் சிரித்துக் கொண்டே தலையசைத்தாள். அவளுக்கெதிரே இருந்த நாற்காலியைக் காட்டினாள் உட்கார்வதற்கு. இருகரம் குவித்-தேன். அவளும் பதிலுக்கு வணக்கம் தெரிவித்தாள்.

அம்பாள் மானுடவடிவில் வந்தால் இப்படித்தான் இருப்-பாளோ? எவ்வளவு தெய்வீகம் அவள் முகத்தில். அம்பாளாய் நடித்துப் பிறர் வழிபட ஆளாயிருக்கிறேன். மானுடமாய் நடிக்கும் ஈஸ்வரியை கண்டு நான் வணங்கினேன். என் வயது தானிருக்கும் எவ்வித மேக்கப்பும் இன்றி வரைந்த ஓவியம் போன்றிருந்தாள். முகத்தில் தெளிவு. கண்களில் அதீத ஒளி. அவள் கண்களில் கனிவிருந்தது. பிரமிப்புடன் நின்றேன்.

‘உட்காருங்கள்’ என்றாள் பரிவுடன். உடனே நான், ‘நீங்கள் என்னைச் சுமதி என்று ஒருமையில் அழைக்கவேண்டும். அப்போதுதான் என்னால் மனம் விட்டுப் பேசமுடியும்’ என்றேன்.



‘என் பெயர் வசந்தி. நீயும் என்னை அப்படியே அழைக்கலாம். உன்னிடம் உரிமையுடன் நடக்க எனக்கும் உதவியாக இருக்கும்’ என்றாள்.

திடீரென கடந்த காலத்தில் நேர்ந்த சிறுமைகளை, அவலங்களை நினைத்து அழவாரம்பித்தேன். நான் அழுது முடிக்கட்டும் என்பதுபோல் காத்திருந்தாள். டேபிள்மீது மூடிவைத்திருந்த தண்ணீர் கிளாஸை எடுத்துக் கொடுத்தாள். குடித்தேன்.

‘என் தொழிலில் ஒவ்வொரு நாளும் ஏதேனும் தொல்லை வருவது தவிர்க்க முடியாததாயிருந்தது’, என்றேன்.

‘என்ன தொழில் செய்கிறீர்கள்?’ என்றாள். பிறகுதான் அவள் உலகில் இருந்து கொண்டே தனக்குள் வாழும் வித்தியாசமான பெண் என்று தெரிய வந்தது. நான் ஒரு பிரபல நடிகை என்பதை அவள் அறிந்திருக்கவில்லை என்று தெரிந்தது. என் அகந்தைகூடச் சிறிது ஆட்டம் கண்டது.

‘நீங்கள் திரைப்படங்கள் பார்ப்பதில்லையா?’ என்றேன்.

‘பொழுது போகாதவர்களுக்குத் தேவை அது. எனக்குப் பொழுது போதவில்லை’ என்றாள் மென்மையாகச் சிரித்துக் கொண்டு.

‘அழகும், திறமையும் இருந்ததால் திரைப்படத் துறைக்கு வந்தேன். இளமையும், பெண்மையும் பாதுகாப்பில்லா-தவர்களுக்கு எதிரி என்பதைப் பல நேரங்களில் உணரச் செய்யும் நிகழ்ச்சிகளால் மனம் அடிபட்டது. முன் வைத்த காலைப் பின் வாங்க முடியாத நிலை ஒருபுறம். அரிதாரம் பூசி உள்ளத்து அழுக்கை மறைக்கும் அற்பர்களைச் சந்தித்தேன். கண்ணியமான கதாநாயகன் வேடத்திற்குள் பதுங்கியிருந்த கயவர்களைத் தவிர்க்க முடியாத அவலங்களை அனுபவித்தேன். எதிர்க்கத் துணிவின்றி, ஏற்க மனமின்றி நடிப்புத்துறைமீது கொண்ட பற்றினால் கறைபட்ட ஒரு வாழ்வு வாழ்ந்தேன். தெய்வத்தின் கருணையால் நீரையொதுக்கி பாலை மட்டும் பருகும் அன்னப்பறவை போல் என் அழுக்குகளைப்

புறக்கணித்து என் அகத்தின் மென்மையை, உண்மையை நேசித்த ஒருவர் என்னை மணந்தார். மணவாழ்வின் பரிசாக கரு உருவானது. ஒரு புறம் மகிழ்ச்சி. இருந்தாலும், என் கசப்பான அனுபவங்கள் கருவை உருவாக்கி செம்மையாய் வளரவிடாதோ என்று மனம் அஞ்சுகிறது. அதனால் குறையான குழந்தையைப் பெற்றெடுப்பேனா என்று ஐயம் எழுகிறது. அதனால்தான் கலைத்துவிட நினைக்கிறேன்' என்றேன்.

'வேண்டாம் சுமதி! கருவைக் கலைக்க வேண்டாம். சொல்லப் போனால் ஒரு நல்ல ஜீவனை உலகுக்குக் கொண்டு வரும் வாய்ப்பு உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏன் தெரியுமா? நீ வாழ்வின் அவலங்களை நேருக்கு நேர் சந்தித்திருப்பதால் அவற்றை அவற்றிற்கெதிரான நலங்களாக மாற்ற உடன்பட்டால் அது உயர்ந்த பயனைத்தரும். மனவமைதியற்ற நிலையில் ஒரு நல்ல குழந்தையைப் பெற்றெடுக்க முடியாதோ என்றஞ்சுகிறாய். உனக்குப் பிறக்கப் போகும் குழந்தை உயர்ந்த தன்மையுடைய குழந்தையாக உன் வயிற்றில் வளர ஒரு உபாயமிருக்கிறது. அதற்கு ஓருயர்ந்த சூழலை உன்னைச் சுற்றி உருவாக்க வேண்டும். அத்தகைய சூழலுக்கு நீ வரச் சம்மதித்தால் நான் உன்னை என்னுடன் அழைத்துப் போகிறேன். உன் கடந்த காலத்தை மறக்கவும், இப்போது நீ இருந்து கொண்டிருக்கும் சூழலை விட்டு நீங்கவும் அது உதவியாயிருக்கும். உன் தொழிலுக்குத் தற்காலிகமாகவாவது விடுமுறையளித்துவிட்டு என்னுடன் வா. குழந்தை பிறக்கும்வரை என்னுடனிருக்கலாம்' என்றாள்.

எனக்கு அவள் பேச்சு நம்பிக்கையூட்டியது. என் குழந்தை என்ற என் ஆர்வம் நிறைவேறப்போகும் மகிழ்ச்சி கலக்கத்தைக் கவலையைப் போக்கிற்று. கையிலிருப்பதை எல்லாம் நடித்துக் கொடுத்துவிட்டு ஓராண்டு விலகியிருக்க முடிவு செய்திருப்பதாய்க் கூறி தொழில் தொடர்பான யாவற்றையும் விட்டுவிலகி பரசுராமின் ஒப்புதலுடன் வசந்தியுடன் சென்றேன்.

எந்த உலகைச் சேர்ந்த பெண்ணிவள் என்று வியக்கும்படியிருப்பாள். தெய்வீகம் மேற்கொண்ட மானுட வடிவமோ இவள்? அமைதிக்கும் ஒருருவம் உண்டென்றால், சாந்தம் ஒருருக் கொள்ளுமென்றால் அது இவள் உருவம்தான். துயரங்களால் தீண்ட முடியாத ஒரு மானுடப்பிறப்பு இருக்கும் என்றால் அது இவள்தான். உலகைத் துறந்த பின்னும் காட்டிற்கு ஓடாத துறவி உண்டென்றால் அது இவள்தான். பற்றுக்களால் பற்ற முடியாத பற்று அவள். வேலும், வாளும் ஏந்தாத வீராங்கனை. யாரைப் பார்த்தாலும் விருப்பு, வெறுப்பின்றிச் சிரிக்கும் குழந்தையின் கள்ளமில்லாச் சிரிப்பே அவள் அணிந்திருக்கும் அணிகலன். நெஞ்சத்து உறுதியே அவள் ஆயுதம். பகைமை, பொறாமை, சுயநலம், இவை இவளைச் சந்திக்க நேர்ந்தால் அவை அவள் தூய்மையின்முன் வலுவிழந்து வடிவிழந்து விடும். ஆண், பெண் சிறியவர், பெரியவர் நல்லவர், தீயவர் என்ற பாகுபாடுகளெல்லாம் இவள்முன் வேறுபாடழிந்து தம் சுய ஜீவனைத் தொட்டுவிடும்.

பிரபல நிறுவனமொன்றில் நல்ல வேலையிலிருந்தாள். ஆனால் அவள் ஒரு வீட்டில் யார் துணையுமின்றித் தனியாக இருந்தாள்.

அவள் வாழும் சூழலும் அவளைப் போலவே தெய்வீகம் மேற்கொண்டிருந்தது. நகரைவிட்டு விலகி உள்ளடங்கிய பகுதி பச்சிலைக்காடு. உள்ளே எளிமையும், புதுமையும் கலந்த வீடுகள். வீடுகள் இருப்பதே கண்ணில் தெரியாத அளவு மரஞ்செடி கொடிகள். வண்ணமும், வனப்பும், மணமும் கொண்ட பூக்களை ஆடையாய் அணிந்த, 'மனோரஞ்சிதம்' என்ற பெயர் கொண்ட குடியிருப்புப் பகுதியது. அதில் நடுநாயகமான வீடு அவள் வசிப்பது. ஒவ்வொரு வீடும் வரிசையாய் நடப்பட்ட செடிகளையே சுற்றுச் சுவராய்க் கொண்டிருந்தன. துளசியும், மல்லியும் இணைந்து மணம் பரப்பும் இடம் அது. தூய காற்று. ஆழ்ந்தகன்ற கிணற்றிலிருந்து நீர் கொண்டுவரும் குழாய் இணைப்புகள் எங்கும் இருந்தன. வளமான பகுதி. ஆதரவற்றதால் அவலங்களைச் சந்தித்த எனக்கு எப்படி ஒரு பெண் தனியாக இருக்கமுடியும் என்று வியப்பு. ஆரம்பகாலத்தில் நான்பட்ட துன்பங்களையெல்லாம் எண்ணிக்கொண்டேன்.

‘சுற்றத்தார் யாருமில்லையா?’ என்று அவளிடம் கேட்டேன்.

‘உலகமுழுதும் என் சுற்றமே’ என்பாள் சிரித்துக்கொண்டே.

‘தனியாக இருப்பதற்கு பயமாக இல்லையா?’ என்று கேட்டேன்.

‘நமக்குள் மறைந்திருக்கும் அந்த அற்புதப் பொருளைக் கண்டுபிடித்து அதனுடன் தொடர்பு கொண்டுவிட்டால் தனிமையேது? பயமேது?’ என்றாள். வெகுஇயல்பாக. எனக்கு அவள் செயல் ஒவ்வொன்றும் வியப்பளித்தது. பெருமிதமாக-வுமிருந்தது.

அவளை மற்றவர் பார்க்கும் பார்வையில் மரியாதை தெரிந்தது. நம்பிக்கையுடன் அவளை நாடி வருபவர்கள் எத்தனை பேர். பரோபகாரம் என்ற பெயரில் அவள் எதுவும் செய்யவில்லை. மிக இயல்பாக இருந்தாள்.

என்னை நன்றாகக் கவனித்துக் கொண்டாள். நூலகம் போல் ஓர் அறையைப் பாதுகாத்தாள். சில நேரங்களில் இங்கு அமர்ந்து இனிமையாக வீணை வாசிப்பாள். அதிகாலையிலும், நடு இரவிலும் கூட தியானம் செய்வாள். ஆனால் சுவாமி அறை என்று ஏதுமில்லை. வீட்டின் தூய்மையில் கவனமாயிருப்பாள். ஆடம்பர அலங்காரப் பொருட்கள் ஏதுமிராது.

எனக்கு நேரத்தில் பரிவாக உணவளிப்பாள். என்னைப் பற்றியோ, தன்னைப் பற்றியோ எதுவும் பேசமாட்டாள். ஆனால் நான் என் குழந்தை மிக நல்ல முறையில் உருவாக வேண்டும் என்று ஆசைப்பட்டதை வரவேற்கும்படியாக நடந்து கொள்வாள். அவளுடனிருந்தது குறுகிய கண்ணோட்டத்தை, அற்ப சிந்தனைகளைக் கடக்கச் செய்தது.

அவளுடன் சிறிது பேசினாலும் என் அறியாமை வெளிப்பட்டு, அவள் உயர்வுணர்வால் வெட்கப்பட்டு மறைந்துவிடும். ஒரு முறை நான் அவளிடம் ‘நீ எந்த மதத்தைப் பின்பற்றுகிறாய்?’ என்று கேட்டேன்.



‘ஏன் அப்படிக் கேட்கிறாய்?’ என்றாள். இந்த வீட்டில் எந்தக் கடவுள் படமும் இல்லை. வேறு வழிபாட்டு முறைகள் எதனையும் நீ பின்பற்றுவதில்லை. அதனால் கேட்டேன் என்றேன்.

‘மதம் என்பது நடைவண்டி போன்றது. நடக்கப் பழகும் வரைதான் நடைவண்டி தேவை. நடக்கத் தெரிந்தால் வண்டியைத் தேடுவதில்லை. விரைந்து நடக்கவும் ஓடவும் முயற்சி செய்ய வேண்டும்’ என்றாள்.

‘மதம் நடைவண்டி என்பது சரி. ஓடுவது, நடப்பது என்று எதைச் சொல்கிறாய்’ என்றேன்.

‘அடுத்த நிலை ஆன்மீகம்’ என்றாள். ‘ஆன்மீகம் பற்றி ஒன்றும் புரியவில்லை’ என்றேன்.

‘இது சொல்லிப் புரியவைப்பதைவிட ஆர்வத்தால் தானே விளங்குவதுதான் சிறந்தது’ என்றாள்.

‘நேரம் கிடைக்கும் போதெல்லாம் படித்துக் கொண்டே-யிருக்கிறாயே, எதைப்பற்றி?’ என்று கேட்டேன்.

‘இறைவனுக்கே என்னைத் தருவது எப்படி என்று படிக்கிறேன். இறைவன் என்னில் செயல்படுவது எப்படி என்பது பற்றிப் படிக்கிறேன்’ என்பாள் புன்னகை மாறாமல்.

அவள் சொல்லிலும், செயலிலும் தூய்மை இருந்தது. அவள் வசிக்கும் இடத்தைத் தூய்மையாக வைத்திருந்தாள். தேவையில்லாது ஒரு சொல்லும் பேசமாட்டாள். இயன்றவரைப் படிப்பு, செயல் இரண்டும் இருக்கும். என் முகக் குறிப்பறிந்து என்னை எதுவும் கேட்காமலேயே என் தேவைகளைப் புரிந்து கொள்வாள். நிறைய பேச வேண்டும் என்ற எண்ணம் தேவையற்றது என்றுணர்ந்தேன். திரைப்படத்தில் என் பார்வையையும் சிரிப்பையும் கண்டு மனம் பறிகொடுத்ததாய் எனக்கு வரும் கடிதங்கள் எத்தனை அர்த்தமற்றவை என்று தோன்றும். அவள் விழியிலும், சிரிப்பிலும் ஒரு காந்த சக்தி-யிருந்தது. அது நடிப்புக்காக முயன்று செய்யப்பட்டதன்று. இறைவன் தந்த வரங்களாக இயல்பிலேயே அமைந்திருந்தது.

அவள் என்னைப் பார்த்து மென்மையாகச் சிரிக்கும் போது எனக்குள்ளே கடந்தகால அவலங்கள் பொடிப்பொடியாய்ச் சிதறிவிடும். இலேசான ஓருணர்வு உள்ளே எழுந்து உடல் முழுதும் பரவும். அவள் உடனிருப்பது மனதிற்குத் திடமாகவும், உற்சாகமாகவுமிருக்கும். எதைப்பற்றியும் கவலையின்றி, நேர்மையாக அமைதி தவழும் வாழ்வு வாழ்ந்தாள்.

'நீ சிறுவயதில் கூட திரைப்படம் பார்த்ததில்லையா?' என்று ஒரு முறை கேட்டேன். எனக்குரிய துறை என்பதால் இப்படிக் கேட்கத் தோன்றியது போலும்.

'சிறு வயதில் சில படங்கள் பார்த்திருக்கிறேன். ஏனோ எனக்கு அதில் ஈடுபாடே இருந்ததில்லை' என்பாள்.

'ஒரு திரைப்பட நடிகையை உங்கள் வீட்டில் வைத்திருப்பது பற்றி என்ன நினைக்கிறாய்?' என்றும் ஒருமுறை கேட்டு விட்டேன். அவள் தூய்மையின்முன் என்னைப் பற்றிய தாழ்வுணர்வு ஏற்பட்டதால் அப்படிக் கேட்கத் தோன்றியது.

'உன்னை ஒரு கருவைத் தாங்கியுள்ள தாயாக மட்டுமே பார்க்கிறேன்' என்றாள்.

அவள் பரிவு எனக்கு அவளிடத்தில் நம்பிக்கையையும் ஒரு உரிமையையும் கூட அளித்தது. எனவே, ஒரு நள்ளிரவில் எனக்கு வயிற்றுவலி வந்தவுடன் அவளை எழுப்பி பதற்றத்துடன் கூறினேன். ஆனால் அவளோ பதற்றமோ, படபடப்போ இன்றி இயல்பாக, ஆனால் இதமாகச் செயல் பட்டாள். முதலில் அருந்தத் தண்ணீர்க் கொடுத்தாள். பிறகு என்னைப் படுக்கவைத்து என்னருகே அமர்ந்து ஒரு பருமனான புத்தகத்தை மௌனமாகப் படிக்க ஆரம்பித்தாள். சிறிது நேரம் சென்றபின் என்னையறியாமல் உறங்கிவிட்டிருக்கிறேன். நான் கண்விழித்தபோது பொழுது விடிந்திருந்தது. அவள் எனக்குச் சிற்றுண்டி தயாரித்துக் கொண்டிருந்தாள். இரவு வலி வந்ததே மறந்துபோய்விட்டது.

அதுபோலத்தான் உடல் நலக்குறைவாக நான் எந்தப் பிரச்சனையைச் சொன்னாலும் உடனே அந்தப் பருமனான



புத்தகத்தைக் கொண்டுவந்து என்பக்கத்தில் அமர்ந்து படிக்கத் தொடங்கி விடுவாள். அந்தப் புத்தகத்தின் மேல்புறத்தில் 'லைப் டிவைன்' என்று எழுதியிருப்பதைப் பார்த்திருக்கிறேன்.

தெய்வீக வாழ்வு என்ற பொருளில் இப்புத்தகம் இருக்கிறதே. எது தெய்வீக வாழ்வு என்று சுருக்கமாகச் சொல்லும்படி ஒரு முறை கேட்டேன்.

நம் அகந்தைக்குப் பின்னால் நம் ஆன்மா மறைந்திருக்கிறது. மறைந்திருக்கும் ஆன்மா வெளிவந்து அகந்தையை அழித்து அதற்குப் பதிலாக தான் செயல்படுவது தெய்வீக வாழ்க்கை என்றாள்.

அதைப்பற்றி மேலும் அறிய எனக்கு ஆர்வமில்லை. என் கடந்த கால அவலங்களை எல்லாம் அவளிடம் சொல்லி அழுவேன். அவற்றையெல்லாம் மறந்துவிடுவது நல்லது என்று சொல்வாள். பழைய துன்பங்களை நினைப்பதால் துன்பம் வளரும். அதை அடியோடு புறக்கணித்துவிடு. இப்போதுதான் பிறந்தது போல இந்தக் கணத்திலிருந்து புத்துணர்வுடன் வாழத் தொடங்கு என்பாள். ஆனால் நானோ என் கடந்த கால பலவீனங்கள், குறைகள், கெட்ட எண்ணங்கள், வெறுப்புணர்வு, எரிச்சல், பொறாமை, போட்டி, இவற்றை-யெல்லாம் எண்ணி வெட்கப்பட்டு அவளிடம் மனம்விட்டுக் கூறுவேன்.

'உனக்கு ஒன்று தெரியுமா? நல்லெண்ணம் உள்ளவர்களை விட, தீய எண்ணம் அதற்கெதிரான நல்லெண்ணமாக மாறியவர்களின் சக்தி பெரியது. திருடனுக்குத் திறமையதிகம். திருட்டுக்குப் பயன்படுத்தும் அறிவை நல்லதிற்குப் பயன்-படுத்தினால் பலன் அதிகம். அதுபோல், நீ கூறிய குறைபாடுகள் அப்படியே வெளிப்பட்டால் தவறுதான். அவற்றை அவற்றிற்-கெதிரான நல்ல குணங்களாக மாறச் செய்தால் அளவுகடந்த நன்மை பெறுவாய். சேற்றில் செந்தாமரை போல் உன் குழந்தை உயர்ந்த குணங்களைப் பெறும். பெற்றவர்களிடம் வெளிப்-படாமல் அடங்கியுள்ளவை பிள்ளைகளிடம் வெளிப்படும் என்றொரு சட்டம் உண்டு' என்றாள்.

என் குறைகள் ஒவ்வொன்றையும் உள்ளே குணங்களாக மாற்றும் முயற்சியில் ஈடுபட ஆரம்பித்தேன். என் உள்ளத்து குறைபாடுகள் குறைந்து புத்துணர்வு எழுந்தது. எப்போதும் மகிழ்ச்சியாய் இனிமையாய் உணரவாரம்பித்தேன். புலம்பல், அழுகையாவும் ஓய்ந்தே போயிற்று. பழைய சோர்வுகள் சுத்தமாக அழிந்து போனது.

எவ்வித இடையூறுமின்றி இயல்பான முறையில் ஆர்த்தி பிறந்தாள். பிறந்த ஒரு மாதம் வரை அங்குதான் இருந்தேன். பிறகுதான் வந்தேன். வந்தவுடன் இறைவன் உன்னையும் என்னிடம் அனுப்பிவைத்தான். ஆர்த்தியை வளர்ப்பதில் இடையூறு ஏதுமில்லாதிருந்தது என்று கூறி முடித்தாள் சுமதி.

அத்தனை மாதங்கள் அங்கு தங்கியிருந்தாயே, உன் பிரிவை அந்தப்பெண் எப்படி உணர்ந்தாள்.

எனக்குத்தான் அவளைவிட்டுவர மனம் வரவில்லை. ஆனால் அவள் இயல்பாகவே இருந்தாள். அவளிடம் பிரிவின் பாதிப்பு ஏதுமில்லை. சாதாரண மனவுணர்வுகளையெல்லாம் அவள் கடந்திருந்தாள். இத்தனைக்கும் நான் அங்கிருந்த வரை குழந்தையைக் கொஞ்சுவாள். மடியில் வைத்துக்கொண்டு அதன் சிரிப்பை இரசிப்பாள். பூப்போன்ற பாதங்களைத் தொட்டு மகிழ்வாள். கடவுள் தரிசனம் என்பாள். ஆனால் பிரிவிற்கு அவள் எவ்வித மாற்றமும் தெரிவிக்கவில்லை. அன்புடன் வழியனுப்பினாள். கிடைப்பதை ஏற்கவும், போவதை விட்டுவிடவும் அவளால் முடிந்தது. ஒரு பெரிய தொகையைக் கொடுக்க மிகவும் விரும்பினேன். 'என் பயிற்சிக்கு நீ ஒரு வாய்ப்புக் கொடுத்திருப்பதாய் கருதுகிறேன். இதைப் பெரிதுபடுத்தாதே' என்றாள்.

'ஏதோ பயிற்சி செய்கிறாள் என்றாயே, அது என்ன பயிற்சி என்று புரிந்ததா?' என்றாள் சுபா. 'ஒவ்வொரு செயலிலும் இறைவனை வெளிப்படுத்த முயற்சிப்பதாகக் கூறுவாள். அந்தப் பெரிய விஷயமெல்லாம் என்னால் சிந்திக்க முடியவில்லை. ஆனால் அவள் நம்மைப்போல சிறுசிறு



விஷயங்களுக்கெல்லாம் உணர்ச்சிவசப்படும் சாதாரண-மானவள் அல்லள் என்பது மட்டும் அவளுடன் ஓரிரு நிமிடம் பழகினாலும் புரிந்துவிடும்' என்றாள் சுமதி.

'அப்படியா? வித்தியாசமாகவும், விசித்திரமாகவுமிருக்கிறது. எனக்கே அந்தப் பெண்மணியைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது' என்று சுபா சொல்லிக் கொண்டிருக்கும்போதே சுமதியின் கணவர் அங்கு வரவே சுபா தன்னிடத்திற்குத் திரும்பிவிட்டாள்.

போர்வையை மூடிக்கொண்டு தூங்குவதுபோல் பாவனை செய்கிறாள் என்று ஆர்த்தியிடம் சென்றாள். 'ஆர்த்தி!' என்ற-ழைத்த வண்ணம் போர்வையை விலக்கி முகத்தைப் பார்த்தாள் சுபா. முத்துமுத்தாய் வியர்த்திருக்க சிறு குழந்தை போல் உறங்கிக் கொண்டிருந்தாள். சற்றுமுன் இருந்த கோபம் இருந்த இடம் தெரியவில்லை. இவள் காட்டிய வெறுப்பில் கலங்கிப் போய் உறக்கமின்றி இருந்தாள் சுமதி. இவற்றிற்கெல்லாம் என்ன காரணம்?

செல்வந்தர்களுக்குரிய சோம்பேறித்தனம் ஆர்த்தியிடம் சொந்தம் கொண்டாட முடியாமல் தோற்றது. அதிகாலையில் யாவரும் எழுந்திருக்கும் முன்பே எழுந்து விடுவாள். தொடக்கத்தில் இது சுபாவுக்கே தெரியாதிருந்தது. இத்தனை காலையில் எழுந்து என்னதான் செய்கிறாள்? வீடு பூராவும் அவளைத் தேடிக்காணாது இறுதியில் அவள் படிக்கும் அறையில் லேசான ஒளிவருவதைக் கண்டு மெல்லக் கதவைத் தட்டினாள். மெல்ல வந்து கதவைத் திறந்த ஆர்த்தி புன்னகை-யோடு நின்றாள். 'இத்தனை காலையில் எழுந்து என்ன செய்து கொண்டிருக்கிறாய்? படிக்கிறாயா?' என்றாள்.

மெல்ல அவள் கையைப் பற்றி, உள்ளே அழைத்து கதவைத் தாளிட்ட பிறகு, நிறுத்தி வைத்திருந்த டேப்ரிகார்டரை ஆன் செய்து சிறிய அளவில் ஒலியைக் குறைத்து வைத்துத் தானும் உடன் பாடினாள். இனிய குரல்வளம் ஆர்த்திக்கு. என்ன இனிய பாடல்? மகிழ்ச்சி மேலிட கண் பனித்தது சுபாவுக்கு. ஆர்த்தியை

அணைத்து உச்சிமோர்ந்தாள். முத்தமிட்டாள். சுபாவின் இந்த அன்பில் அடங்கிப் போனாள் ஆர்த்தி.

என்ன விந்தையிது? உச்சிதனை முகந்தால் கருவம் ஓங்கி வளருதடி; மெச்சி உனை ஊரார் புகழ்ந்தால் மேனி சிலிர்க்குதடீ என்ற பாடல் வரிக்குச் சுமதியின் பாவம் கண்டு பாராட்டியவர்கள் ஏராளம். ஆனால் அந்தத் தாயன்பை உண்மையான மகளிடம் வெளிப்படுத்த வாய்க்கவில்லையே அவளுக்கு.

'ஆர்த்தி! இந்த இசையை நீ வெளியுலகிற்குத் தரப் போவதில்லையா?' என்றாள் சுபா.

'பெரியம்மா! இது புகழுக்குப் பாடும் பாட்டில்லை. இறைவனுக்கு நிவேதனமாய்ச் செய்யப்படும் இசையாராதனை. இதை வெளியில் பரப்பத் தேவையில்லை' என்றாள் ஆர்த்தி.

'அப்படியானால், அந்த பகுதியிலிருந்து ஒரு சுவாமி படமாவது கொண்டு வந்து இங்கு வைக்கட்டுமா?' என்றாள் சுபா.

'பெரியம்மா! இந்த அறையில் சுவாமி இல்லை என்றா நினைக்கிறீர்கள்?' என்றாள் ஆர்த்தி. ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனாள் சுபா. இவளுக்குள் உள்ள இந்தக் கோணங்களை அவள் பார்த்ததில்லை.

'அப்படியென்றால் சுவாமி படம் வைத்து ஆராதிப்பவர்களெல்லாம் ஒன்றும் தெரியாதவர்களா?' என்று விளையாட்டாய்க் கேட்பதுபோல் அவள் உணர்வை எடை போட்டாள் சுபா.

'அவர்களைப் பற்றி எனக்குத் தெரியாது பெரியம்மா. நான் பாடும்போது மெய்மறக்கிறேன். என்னை மறந்து இறைவனோடு இணைகிறேன். அப்போது எனக்கு ஏதும் தேவைப்படுவதில்லை' என்றாள் ஆர்த்தி.

அவள் தன்னறையையும், பொருட்களையும் மிக ஒழுங்காய் வைத்திருப்பாள். புத்தக அலமாரியைக் கவனமாகப் பாதுகாப்பாள். ஒரு புத்தகம் ஒழுங்கற்ற முறையில் செருகப்பட்டாலும் அவளுக்குப் பிடிக்காது. அவசரம், அவதியென்று பொருட்களை முறையற்றுக் கையாளமாட்டாள். பணிப்பெண்கள் செய்யட்டும்



என்று அலட்சியமாக இருக்கமாட்டாள். அப்படிச் செய், இப்படிச் செய் என்று பணக்கார தோரணையில் எவரையும் ஏவமாட்டாள்.

இவள் புத்தகங்களை அழகுற அடுக்கி எடுத்துக்கொண்டு ஸ்கூல் யுனிபாரத்துடன் கண்குளிரக் கிளம்புவாள். டைனிங் டேபிளுக்கு இவள் வருவதற்குள் சுபா பலகாரத்துடன் இவளிடம் வருவாள். அப்படியே வாயைத்திற ஊட்டி விடுகிறேன் என்று இட்லி விள்ளலைச் சட்னி தோய்த்து எடுப்பாள், போ பெரியம்மா! இப்படிச் செல்லம் கொடுத்து என்னை சோம்பேறி ஆக்காதே என்று எத்தனை முறை சொல்வது என்று உரிமையாய்க் கடிந்து கொள்வாள் ஆர்த்தி.

'என் கண்ணே! நீ சோம்பேறி ஆவதற்காக நான் இதைச் செய்யவில்லையடா. நீ ஸ்கூலுக்கு நேரத்தில் கிளம்ப உதவியாய் இதைச் செய்கிறேனடா' என்பாள் சுபா. அந்த அன்பிற்குக் கட்டுப்படுவாள் ஆர்த்தி. ஆனால் உடனே தன் கருத்தைத் தெரிவிப்பாள். 'பெரியம்மா, நீ சொல்வது போல் நேரத்தில் கிளம்ப முடியாமல் நானென்ன கடுமையான வீட்டு வேலைகளா செய்கிறேன்? இனிமேல் இந்தப் பணிவிடைகளையெல்லாம் நீ செய்யக் கூடாது', என்று அன்புக் கட்டளையிடுவாள். சுபாவிற்குப் பெருமையாய் இருக்கும். பெண்ணைச் செல்லம் கொடுத்துச் சோம்பேறியாய் வளர்த்திருக்கிறாள் என்று யாரும் பேச முடியாதல்லவா?

தன் பெண் பள்ளிக்குச் செல்லும் கண்கொள்ளாக் காட்சியைக் காண ஆவலுடன் ஓரிரு முறை சுமதி அங்கு வந்த போது தன் ஆர்வமெல்லாம் சுருங்கி, வெறுப்புடன் புத்தகப்பையை தோளை விட்டு கழற்றி வைத்து, ஷூ, சாக்ஸை கழற்றி வைத்துவிட்டு அறையில் போய் படுக்கையில் படுத்து விடுவாள். ஆர்த்தி அத்தனை வெறுப்பிலும் அவள் தன் ஸ்கூல் பேக்கை விட்டெறிந்ததோ, ஷூ, சாக்ஸை விட்டெறிந்ததோ கிடையாது. முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டு அம்மா வந்ததில் தனக்கு விருப்பமில்லை என்பதைத் தெரிவிக்கும் முகமாக உள்ளே போய்விடுவாள். இதன் பிறகு சுமதி அங்கு வருவதை அடக்கிக் கொண்டாள். மனம் பாசத்தால் துடிக்கும்.

பால்கனியில் மறைந்து நின்று குழந்தை காரில் ஏறுவதைத் திருட்டுத்தனமாய்ப் பார்த்து ஆனந்தக்கண்ணீர் வடிப்பாள் சுமதி.

சுபா தன்மகளைப் பள்ளியில் விட்டுவிட்டுத் திரும்பி வரும்வரை (ஷூட்டிங் போகாத நாட்களில்) ஆவலோடு காத்திருந்து சுபா வந்ததும் அவள் கையைப் பற்றி தன் குழந்தையைப் பாதுகாப்பதற்கு நன்றி கூறுவாள். ஆர்த்தி பள்ளியிறுதி வகுப்பும் வந்து விட்டாள்.

‘சுமதி! உண்மையில் நான்தான் உனக்கு நன்றி சொல்ல வேண்டும். தங்கத்தில் பதுமை செய்து தெய்வீகத்தில் தோய்த்-தெடுத்தாற் போல ஒரு பெண்ணைப் பெற்று என்னிடம் தந்திருக்கிறாய். நீ வெறும் தேவகி. நானல்லவா யசோதையாய்க் களிக்கிறேன்’ என்று ஆனந்தக்கண்ணீர் வடிப்பாள்.

‘பெரியம்மா! பப்ளிக் எக்ஸாம் டைம் டேபிள் கூட வந்துவிட்டது. இனி ஸ்கூல் போகத் தேவையில்லை. ஸ்டடி லீவ்தான். இங்கு தனியே படிப்பதை விட பாரதியுடன் அவள் வீட்டில் படித்தால் நன்றாக இருக்கும் பெரியம்மா’ என்று கெஞ்சுவது போல் கொஞ்சினாள்.

‘ஆர்த்தி! நீ தினமும் அங்குப் படிக்கப் போனால் அக்கம்பக்கம் கூடிவிடும். சுமதிக்கு இருக்கும் பிரபலம் உனக்குத் தெரியாதா?’ என்று நயமாய்க் கூறினாள் சுபா.

‘போ பெரியம்மா. நான் எக்ஸாம் எழுதப் போவதில்லை. எனக்குப் படிப்பு வேண்டாம்’ என்று கூறி செஸ் போர்டை பிரித்து வைத்துக் கொண்டாள்.

‘ஆர்த்தி! பெரியம்மா உன் விருப்பம் போல் நடக்கிறே-னல்லவா. இப்போது நான் சொல்வதை நீ கேட்கக்கூடாதா? படிப்பில்லையென்றால் என்ன பயன்?’ என்று மிகுந்த பரிவுடன் அருகில் வந்து கூறினாள்.

‘ஒன்றும் ஆகிவிடாது பெரியம்மா. உலகில் படிப்பில்லா-தவர்கள் உயிர்வாழவில்லையா என்ன?’ என்று சர்வசாதா-ரணமாயக் கூறி காய் நகர்த்துவதில் கவனம் செலுத்தினாள்.



சுபா அவளையே பார்த்துக்கொண்டு புன்னகை செய்த வண்ணமிருந்தாள்.

‘என்ன பெரியம்மா அப்படிப் பார்க்கிறாய்?’ என்று அவளை ஒருமுறை பார்த்துவிட்டு விளையாட்டைக் கவனித்தாள்.

‘ஒன்றுமில்லை ஆர்த்தி. கல்வியின் இன்றியமையாமையைப் பற்றி பட்டிமன்றத்தில் பேசிப் பரிசு பெற்றாயே அதை நினைத்துச் சிரித்தேன். தெரிந்துதானே ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்று சொல்லியிருக்கிறார்கள்’ என்றாள் சுபா.

உடனே, செஸ் போர்டை எடுத்து அதன் இடத்தில் வைத்துவிட்டு படிக்கும் அறைக்குள் போய் புத்தகத்தை எடுத்துப் படிக்க உட்கார்ந்தாள். சிறிது நேரத்தில் இவள் அறைவாயில் நின்று கொண்டு ‘மே ஐ கமின்’, என்று பாரதி கேட்டது ஆர்த்திக்கு வியப்பாயிருந்தது. ‘ஹாய் பாரதி! உன்னுடன் சேர்ந்து படித்தால் நன்றாயிருக்கும் என்று நினைத்துக் கொண்டே படிக்க வந்தேன். நீயே வந்துவிட்டாய். வா வா’ என்று மிகழ்ச்சியுடன் அவள் கையைப் பற்றி உள்ளே அழைத்துக் கொண்டாள்.

‘உன் பெரியம்மாதான் என் அப்பாவிற்கு போன் செய்து என்னை அனுப்பிவைக்கக் கேட்டுக் கொண்டார்’ என்றாள்.

‘அப்படியா?’ என்றாள் ஆர்த்தி. வியப்புடன் ‘உனக்குத் தெரியாதா?’ என்றாள் பாரதி. என் பெரியம்மா எப்போது என்ன செய்வார் என்று சொல்ல முடியாது என்று அறைவாயிலில் வந்து நின்ற பெரியம்மாவைக் குறும்புடன் பார்த்தாள் ஆர்த்தி.

பாரதியின் வருகையை ஆர்த்தி மகிழ்வுடன் ஏற்றத்தைக் கண்டு நிம்மதியுடன் சென்றாள் சுபா.

இடையிடையே அவர்களுக்குத் தேநீர், பிஸ்கட் என்று கொடுத்து அவர்கள் படிப்பதை உற்சாகப்படுத்தினாள் சுபா.

‘ஆண்ட்டி நாளை ஆர்த்தியை எங்கள் வீட்டிற்கு அனுப்ப வேண்டும்’ என்று அன்புடன் கேட்டுக் கொண்டாள் பாரதி. சுபாவால் மறுக்க முடியவில்லை. ‘நிச்சயமாக அனுப்புகிறேன் பாரதி’ என்று வாக்களித்தாள்.

நீண்ட நேரம் படித்தபின் இருவரும் உறங்கினர். காலையில் ஆறுமணிக்கு விழித்துக் கொண்ட சுபா அவர்களுக்குத் தொல்லைத் தரக்கூடாது என கவனமாய் இருந்தாள். புதிய இடமானதால் பாரதி உடன் விழித்துக் கொண்டாள். ஆர்த்தி அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள். சுபா என்ன செய்வது எனத் தயங்கிய போது, பாரதியே 'ஆண்ட்டி அவளை எழுப்ப வேண்டாம். நான் வீட்டிற்குப் போய் அங்கு மீண்டும் தூங்குவேன்' என்றாள் சுபா. உடனே டிரைவரை அழைத்துக் காரை எடுக்கச் சொல்லி தானும் உடன் சென்று பாரதியை வீட்டில் விட்டுவிட்டு வந்தாள்.

பாரதி, 'ஆண்ட்டி மறக்காமல் இன்று இரவு ஏழுமணிக்கு ஆர்த்தியை அழைத்து வந்து விடுங்கள்' என்றாள்.

தொடரும்...

## ஜீவிய மணி

திறமை வந்தபின் பலன் வர நேரம் வர வேண்டும். பலனை எதிர்பார்ப்பது அவசரம். நேரத்திற்காகக் காத்திருப்பது பொறுமை. பொறுமையின் அவசியத்தை உணர்வது நேரத்தை வரவழைப்பது.

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# ஏன் பிரார்த்தனை பலிக்க தாமதமாகிறது?

பிரார்த்தனை உடனே பலிக்கிறது. சிறிது தாமதமாக பலிக்கிறது. பல ஆண்டுகள் கழித்துப் பலிக்கிறது. ஏன் உடனே பலிக்கக் கூடாது என்பது பலர் எழுப்பும் கேள்வி. நாம் செய்யும் காரியங்களைச் செய்து முடித்துப் பலன் பெறுகிறோம். பரீட்சை எழுதி பாஸ் செய்கிறோம். நிலத்தில் மகசூல் எடுக்கப் பயிரிட்டு அறுவடை செய்கிறோம். மகளுக்குத் திருமணம் செய்ய வரன் பார்த்து, நகை வாங்கி, விழா அமைத்து முடிக்கிறோம். தடையில்லாமல் காரியம் தொடர்ந்து நடப்பதை விரும்புகிறோம். காரியத்தைச் செய்து முடிப்பது நம் வழக்கம். பிரார்த்தனை, நினைத்தால் நடக்கும். உடலில் நெடுநேரம் செய்வதை அறிவால் அடுத்த நிமிஷம் பூர்த்தி செய்வது பிரார்த்தனை. “நான் நினைக்கிறேன், நினைக்கிறேன், நடக்க மாட்டேன் என்கிறதே” என்பது அன்பர் அனுபவம். அறிவு என்றால் மனம் பெறும் தெளிவு. நினைப்பது கேட்பது. கேட்டால் தள்ளிப் போகும். பல ஆண்டுகள் முயன்று முடியாமல் அன்னைக்குப் பிரார்த்தனை செய்து, முதல் மகளுக்கு நல்ல வரன் மூன்று மாதத்தில் கிடைத்தபின் அடுத்த மகளுக்கு மணம் புரிய இந்தச் சட்டத்தை — அறிவால் செய்வதை — ஏற்றவர் மனம் அலை பாய்வதைக் கண்டார். முதற்கேள்வி எப்படி நினைத்தால் நடக்கும், நம்ப முடியவில்லையே என்பது. சரி அன்னை சொல்வதை ஏற்போம் என முடிவு செய்தார். முதல் பெண் திருமணமாகியவுடன் கணவனுக்கு அமெரிக்காவில் வேலை கிடைத்தது. அவர் புறப்பட 3 மாதமாயிற்று. அவர் புறப்படும்வரை மனம் பொறுக்க-வில்லை.

(தொடர்ச்சி பின்பக்க அட்டையில்)

(முன்பக்க அட்டை தொடர்ச்சி)

மனம் அடுத்த திருமணத்தை நாடுகிறது. மறுபுறம் உள்ளிருந்து குரல் எழுகிறது. ஒன்று முடியட்டும் என்று. மனம் கேட்கவில்லை. முதற்காரியம் முடிந்தால்தான் மனம் அடுத்ததற்கு வரும். மனம் வாராதவரை காரியம் முடியாது என்று தெரிந்தாலும், நினைவு அடுத்த திருமணத்திற்குப் பிரார்த்திக்கிறது. பெண் 18-ஆம் தேதி விமானம் ஏறினாள். 19-ஆம் தேதி முழு மனத்துடன் பிரார்த்தனை செய்ய முடிவு செய்தபொழுது, போன் வந்தது. “உங்கள் மகளை என் பையனுக்கு முடிக்கலாமா?” என்று. பிரார்த்தனையை ஆரம்பிக்கும் முன் பலித்தது. முதற்பெண் ஊருக்குப் போகும் முன்னும் மனம் அவளிட-மிருந்து பிரிந்து இரண்டாம் பெண்ணுக்கு வரலாம். வந்தால் பலிக்கும். அது நம்மால் முடிவதில்லை. அறிவால் ஒரு காரியத்தை ஏற்க மனம் இந்தச் சட்டத்தை நம்ப வேண்டும். அது தவிர சிறு சிறு கேள்விகளிருக்கும். அவை விலக வேண்டும். விலக்குவது கடினம். 10 ஆண்டுகளில் நடந்தால் போதும் என்று ஒரு காரியமிருந்தால், இந்த சட்டத்தை நம்ப முடியும் அன்பர் அதை எடுத்து, ஆராய்ந்து, உடன் எழுப்பும் சிறு கேள்விகளை எல்லாம் விலக்க முயன்று விலக்கினால், கடைசி கேள்வி விலகிய-வுடன் காரியம் பூர்த்தியாகும். காரியம் பூர்த்தியான பின்னும் மனம் நடந்த சொந்த அனுபவத்தை நம்பாது. முதலில் எழுப்பிய கேள்விகளை எழுப்பும். எந்தச் சிந்தனையுமின்றி மனம் அன்னையில் லயித்து செயல்-படுவது அன்பருக்கு அழகு.